
# தினபூமி

thinaboomi.com

திருச்சி, திங்கள், மார்ச் 31, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00

**ரஷ்ய அதிபர் விளாடிமீர் புதினை கொல்ல சதியா? கார் வெடித்ததால் அதிர்ச்சி**

...2-ம் பக்கம்

**இந்திய கலாச்சாரத்தின் ஆலமரம் ஆர்.எஸ்.எஸ்.: பிரதமர் மோடி பெருமிதம்**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். 10-வது லீக் போட்டியில் டு பிளெஸ்சிஸ் அபார ஆட்டம்: ஐதராபாத்தை வீழ்த்தியது டெல்லி**

...6-ம் பக்கம்





● சென்னை சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி பகுதியில் இயங்கி வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று வரும் காசநோயால் பாதிக்கப்பட்ட 250 நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவுப்பொருட்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று மருத்துவர்களிடம் வழங்கினார். அருகில் தயாநிதி மாறன் எம்.பி., நிலைக்குழு தலைவர் சிற்றரசு உடனிருந்தனர்.

### தமிழகத்தில் அதிகரிக்கும் வெயில் தாக்கம்:

# 1 முதல் 5-ம் வகுப்புகளுக்கு முன்கூட்டியே ஆண்டுத்தேர்வு

## முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலை அடுத்து தொடக்கக்கல்வி இயக்குநரகம் அறிவிப்பு

சென்னை, மார்ச் 31-

**தமிழகத்தில் தொடர்ந்து அதிகரிக்கும் வெயிலின் தாக்கத்தை அடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலினின் அறிவுறுத்தலை அடுத்து 1 முதல் 5-ம் வகுப்பு வரை இதன்படி வருகின்ற 07.04.2025 முதல் 17.04.2025 வரை முன்கூட்டியே ஆண்டுத் தேர்வை நடத்தப்பட உள்ளதாக தொடக்கக் கல்வி இயக்குநரகம் அறிவித்துள்ளது.**

**முன்கூட்டியே...**

தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆயிரக்கணக்கான பள்ளிகள் தமிழகத்தில் இயங்கி வருகிறது. அரசு தனியார் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் என சுமார் 20 ஆயிரம் பள்ளிகளில் லட்சக்கணக்கான மாணவர்கள் பயில்கின்றனர். இந்த சூழலில் தமிழகத்தில், நடுநிலைப் பள்ளிகளுக்கான முழு ஆண்டுத்தேர்வு வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனிடையே தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக பல மாவட்டங்களில் வெயில் சதம் அடித்தது. இதனால், 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு முழு ஆண்டுத் தேர்வை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

**ஆண்டு இறுதி தேர்வு**

இந்நிலையில் வெயிலின் தாக்கம் தீவிரமாக இருப்பதால், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை முன்கூட்டியே ஆண்டுத் தேர்வுகளை நடத்த உள்ளதாக தொடக்கக் கல்வி இயக்குநரகம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 09.04.2025 முதல் 21.04.2025 வரை மூன்றாம் பருவத் தேர்வு ஆண்டு இறுதி தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

**முன்கூட்டியே விடுமுறை**

தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் தற்போது தீவிரமாக இருப்பதால் பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் மற்றும் பெற்றோர்களின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் உத்தரவின்படியும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் தேர்வுகள் முன்கூட்டியே தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதன்படி வருகின்ற 07.04.2025 முதல் 17.04.2025 வரை தேர்வுகள் நடைபெறவுள்ளன.

**அறிவுறுத்தல்கள்....**

அதன்படி 1 முதல் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கு 3-ம் பருவத் தேர்வுகள் ஏப்ரல் 7 முதல் 17-ம் தேதி வரை நடைபெறவுள்ளன. ஒவ்வொரு வகுப்புக்கும் பாடவாரியாக தேர்வு நடைபெறும் விவரங்கள் அதில் இடம் பெற்றுள்ளன. இந்த அட்டவணையை பின்பற்றி உரிய வழிகாட்டுதல்களின்படி தேர்வுகளை நடத்தி முடிக்க அனைத்து விதமான பள்ளிகளுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என அறிவிப்பில் தொடக்கக் கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

**ஆசிரியர்கள் பணிக்கு...**

கோடை விடுமுறையை பொருத்தவரை 1 முதல் 3-ம் வகுப்புகளுக்கு ஏப்ரல் 12-ம் தேதி முதலும், 4, 5-ம் வகுப்புக்கு ஏப்ரல் 18-ம் தேதி முதலும் தொடங்கும். எனினும், ஆசிரியர்கள் பள்ளி இறுதி வேலைநாள் வரை பணிக்கு வரவேண்டும் என்று துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இதனால் தொடக்க பள்ளிகளுக்கு முன்கூட்டியே கோடை விடுமுறை அளிக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஏ.டி.எம். பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் உயர்வு:

# மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம்

## இது டிஜிட்டல்மயமாக்கம் அல்ல, ஏழைகளை சுரண்டும் செயல்

சென்னை, மார்ச் 31-

**ஏ.டி.எம்.மில் 5 முறைக்கு மேலான பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் உயர்த்தப்படுவதால் நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறும் ஏழைகள் ஆகியோருக்கு பாதிப்பு ஏற்படும். இது டிஜிட்டல் மயமாக்கம் அல்ல, இது நிறுவன மயமாக்கப்பட்ட சுரண்டல் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், அனைவரும் வங்கியில் கணக்கு தொடங்குங்கள் என்று மத்திய அரசு சொன்னது. பிறகு பணமதிப்பிழப்பு நடவடிக்கை கொண்டுவந்து, டிஜிட்டல் இந்தியா என்றார்கள். அடுத்து என்ன? டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் பிடித்தார்கள். குறைவான இருப்புத் தொகை என்று சொல்லி அபராதம் விதித்தார்கள். தற்போது, அனுமதிக்கப்பட்ட மாதாந்திர அளவைத் தாண்டி ஏ.டி.எம்-ல் பணம் எடுக்கும் ஒவ்வொருமுறையும் 23 ரூபாய் வரை கட்டணம் பிடிக்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

இதனால் என்ன ஆகும்? தேவைக்கு மீறி, ஒரேயடியாக மக்கள் தங்கள் பணத்தை எடுக்க வேண்டி வரும். குறிப்பாக ஏழைகளுக்கும் வங்கிச் சேவைகள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தையே இது சிதைத்துவிடும். ஏற்கனவே நிதி விடுவிக்கப்படாமல் தவிக்கும் நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறும் ஏழைகள் ஆகியோர்தான் இதனால் இருப்பதிலேயே அதிக பாதிப்புக்கு உள்ளாவார்கள். இது டிஜிட்டல்மயமாக்கம் அல்ல,

இது நிறுவனமயமாக்கப்பட்ட சுரண்டல். ஏழைகள்

(கடைசி பக்கம் பார்க்க)

### இன்று ரம்ஜான் பண்டிகை:

# இஸ்லாமிய பெருமக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மார்ச் 31-

**ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் இஸ்லாமிய பெருமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்., அறம் பிறழா மனித வாழ்வை வலியுறுத்தும் ரமலான் திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கு உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாமிய சமுதாய மக்கள் ஒரு மாத காலம் கடுமையாக நோன்பிருந்து பசித் துன்பம் என்பதை அனுபவத்தால் உணர்ந்து, ஏழை எளியோர் பால் இரக்கம் கொண்டு, ஈகைப் பண்பு சிறக்க இரமலான் திருநாளை மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள்.

எனது கல்லறையை அலங்காரம் செய்யாதீர்கள்; என்னை இறைவனாக ஆக்கிவிடாதீர்கள்; எனக்கு முன்னாள் வாழ்ந்த நபிமார்களை அப்படி ஆக்கிவிட்டார்கள்; உலர்ந்த ரொட்டித் துண்டுகளையும், காய்ந்த பேரீச்சம் பழங்களையும் உண்டு வாழ்ந்த ஓர் ஏழைப் பெண்ணின் மகன் என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன்” என்று தன் அன்பர்களுக்குக் கூறியவர் அண்ணல் நபிகள் பெருமான்.

பொய்மை, ஆடம்பரம் இவற்றைத் தவிர்த்து எளிமை, அன்பு, அடக்கம் இவற்றை குணநலன்களாகக் கொள்ள வழிகாட்டிய கருணை வள்ளல் அவர். பசித்தோருக்கு உணவிடவும், சமத்துவ, சகோதரத்துவ உணர்வுடன் அனைவரையும் நேசிக்கவும் வழிகாட்டிய பெருமானார். தொழிலாளரின் வியர்வை உலரும் முன் அவன் கூலியைக் கொடுத்துவிடு என்று உழைப்பை மதித்திடும் உத்தமப் பண்பை உலகுக்கு நீதியாய் போதித்தவர்.

மனித வாழ்வு மேன்மை அடைவதற்கான இத்தகைய மார்க்கங்களைப் போதிப்பதால்தான் நபிகள் நாயகத்தை மக்கள் என்றும் போற்றுகிறார்கள். அத்தகைய நபிகள் பெருமகனார் போதித்த நெறியில் வாழ்ந்து, நோன்புக் கடமைகளை நிறைவேற்றி முடித்துள்ள மனநிறைவோடு, ரமலான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும், முதல்வர் என்ற பொறுப்பிலும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருப்பூரில் ஜவுளி ஆலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகளுக்கு பிரதமர் நரேந்திரமோடி பாராட்டு

புதுடில்லி, மார்ச் 31-

**மனதின் குரல் நிகழ்ச்சியில் திருப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளின் பணிகளை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டிப் பேசினார்.**

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ‘மனதின் குரல்’ வானொலி நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார். இதன்படி, மார்ச் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையான நேற்று நடைபெற்ற 120-வது மனதின் குரல் நிகழ்ச்சியில் திருப்பூர் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளின் பணிகள் குறித்தும் பிரதமர் மோடி பேசினார்.

நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்ததாவது,

இந்தியா தான், உலகளவில் அதிக ஜவுளிக் கழிவுகளை உருவாக்கும் மூன்றாவது நாடு. ஜவுளிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதில் இந்தியா முன்னேறி வருகிறது. திருப்பூரின் சாய ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், சுத்திகரிப்பு ஆலைகளில் மறுசுழற்சி செய்யப்படுகிறது.

இதன் மூலம் கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர், நொய்யல் ஆற்றில் கலக்கப்படுகிறது. கழிவுநீரில் இருந்து பிரித்தெடுக்கப்படும் உப்பு, பல்வேறு வகையில் பயன்படுத்தப்படுகிறது.

திருப்பூரில் கழிவுநீர் சுத்திகரிக்கும் பணியும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி பணிகளும் பாராட்டப்பட வேண்டியவை என்று கூறினார்.

# ஒடிசாவில் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டதில் ஒருவர் பலி

கட்டாக், மார்ச் 31-

**ஒடிசாவின் கட்டாக் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டதில் ஒருவர் பலி, ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.**



ஒடிசா மாநிலம், மங்குலி அருகே நிர்குன்டியில் பெங்களூரு-காமாக்யா எக்ஸ்பிரஸ் ரயிலின் 11 பெட்டிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 11.54 மணியளவில் தடம் புரண்டது. இந்த ரயில் பெங்களூருவிலிருந்து அசாமின் குவஹாத்தியில் உள்ள காமாக்யா நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்தது.

விபத்தைத் தொடர்ந்து தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் ஒடிசா தீயணைப்புப் படை மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டன. மேலும், சம்பவ இடத்திற்கு நிவாரண ரயிலும் விரைந்தது. இந்த விபத்தில் ஒருவர் பலியானார். மேலும் காயமடைந்த 7 பேர் மீட்கப்பட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக ஒடிசா தீயணைப்பு சேவை இயக்குநர் சுதன்சு சாரங்கி தெரிவித்தார்.

# மணிப்பூரில் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டம் மீண்டும் அமல்

இம்பால், மார்ச் 31-

**மணிப்பூர் மாநிலத்தில் 13 காவல் நிலைய எல்லைகளை தவிர்த்து மாநிலம் முழுவதும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் மீண்டும் அமல்படுத்தப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து மத்திய அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மணிப்பூர் மாநிலத்தில் 13 காவல்நிலைய எல்லைப் பகுதிகளைத் தவிர, மாநிலம் முழுவதும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் (AFSPA) நீட்டிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 1980-களின் தொடக்கத்தில் இருந்து ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் இருந்து வருகிறது. மணிப்பூர் மாநிலத்தில் தற்போது குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்து வருகிறது.

கடந்த 2023 மே மாதம் வடகிழக்கு மாநிலத்தில் குகி பழங்குடிகளுக்கும், மைத்தேயி பிரிவினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாகி மாநிலம் முழுவதும் பரவியது. இரண்டு ஆண்டுகளாக நீடித்து வரும் கலவரத்தில் 250-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், மாநிலத்தில் மலைப் பிராந்தியம் மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படக்கூடிய இடங்களில் பாதுகாப்பு படையினர் சனிக்கிழமை சோதனை நடத்தினர்.

இதுகுறித்து இம்பால் போலீஸர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பாதுகாப்பு படையினர் நடத்திய சோதனையில் ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப் பட்டன ” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செங்கம், அவினாசி உள்ளிட்ட 7 பேரூராட்சிகளை

# நகராட்சிகளாக தரம் உயர்த்த அரசாணை வெளியீடு


**சென்னை, மார்ச் 31-**

**செங்கம், அவினாசி, பெருந்துறை உள்ளிட்ட 7 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**


**தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளை அதிகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் முடிவடையும் போது 25 மாநகராட்சிகள், 146 நகராட்சிகள், 491 பேரூராட்சிகள் உருவாக்கப்படும் என அமைச்சர் கே.என்.நேரு சட்டசபையில் தெரிவித்திருந்தார்.**

**இந்நிலையில் 7 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி திருவண்ணாமலை மாவட்டம் போளூர், செங்கம், கன்னியாகுமரி, சேலம் மாவட்டம் சங்ககிரி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, திருப்பூர் மாவட்டம் அவினாசி, ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஆகிய 7 பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படுவதற்கான அறிவிப்புகள் ஏற்கெனவே சட்டசபையில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.**


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -191.51 | -72.06 |
| பாயின்ட் 77,414.92 | பாயின்ட் 23,591.95 |



**தங்கம்**
1 சவரன் ₹66,880
1 கிராம் ₹8,360



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.56

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# ரஷ்ய அதிபர் புதினை கொல்ல சதியா? கார் வெடித்து சிதறியதால் அதிர்ச்சி

**மாஸ்கோ, மார்ச் 31-**

ரஷியாவின் உளவு அமைப்பான எப்.எஸ்.பி. தலைமை அலுவலகம் அருகே அதிபர் புதினுக்கு சொந்தமான கார் வெடித்து சிதறி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.


ரஷ்ய அதிபராக இருக்கும் புதின், அமெரிக்காவிற்கு அடுத்து உலகில் அதிகபட்ச பாதுகாப்பைக் கொண்ட தலைவர்களில் ஒருவர் ஆவார். அவரது உயிருக்குப் பல அச்சுறுத்தல்கள் இருப்பதால் அவரை பாதுகாக்க ரஷ்ய சீக்ரெட் சர்வீஸ் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவர் ஒரு இடத்தற்குச் செல்வதற்குப் பல வாரங்களுக்கு முன்பே கூட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடங்கிவிடும் அந்த அளவிற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகமாக இருக்கும்.

இந்தநிலையில், புதினின் பாதுகாப்பு கான்வாயில் இடம்பெற்றிருந்த கார் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியுள்ளது. ரஷியாவை சேர்ந்த ஆரஸ் நிறுவனம் தயாரித்த இந்த ஆரஸ் லிமோசின் கார் மாஸ்கோ சாலையில் திடீரென வெடித்துச் சிதறியுள்ளது. இது தொடர்பான வீடியோவும் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த கார் ரஷ்ய உளவுத்துறையான எப்.எஸ்.பி. தலைமையகத்திற்கு அருகே நிறுத்தப்பட்டு இருந்த நிலையில், திடீரென அந்த கார் வெடித்துத் தீப்பிடித்தது. இந்த காரின் மதிப்பு சுமார் ரூ.3 கோடி இருக்கும் என சொல்லப்படுகிறது. முதலில் இஞ்சனில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், பிறகு அது மெல்ல உட்புறம் வரை பரவியதாகக் கூறப்படுகிறது.

இந்த கார் ரஷ்ய அதிபர் மாளிகையின் அதிபர் சொத்து மேலாண்மைத் துறைக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது. இருப்பினும், திடீரென கான்வாய் கார் வெடித்துச் சிதற என்ன காரணம் கார் வெடித்துச் சிதறிய போது உள்ளே யாராவது இருந்தார்களா என்பது போன்ற தகவல்கள் தெளிவாகத் தெரியவில்லை. அதேநேரம் இந்த சம்பவத்தால் யாருக்கும் காயம் அல்லது உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று டெய்லி எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



கார் வெடித்த சம்பவம் ரஷ்ய அதிபர் புதினை கொல்ல சதியாக இருக்கலாமோ என்ற கேள்வியை எழுப்பி உள்ளது. அதேநேரம் இது சம்பவம் தொடர்பாக ரஷ்ய அரசு இதுவரை எந்தவொரு விளக்கத்தையும் அளிக்கவில்லை.

ரஷ்ய அதிபர் புதினை கொலை செய்யச் சதித்திட்டங்கள் நடந்து வருவதாகக் கூறப்படும் நிலையில், இந்தச் சம்பவம் ரஷியாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 ஆயிரம் பேர் பலியானதாக அச்சம்?

**நேப்பிடா, மார்ச் 31-**

மியான்மர் பூகம்பத்தில் இதுவரை 1,600-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்; 3,400-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், இந்த நிலநடுக்கத்தால் சுமார் 10,000 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளதாக அச்சம் எழுப்பப்பட்டுள்ளது.

மியான்மர் ராணுவ நிர்வாகத்தின் சமீபத்திய செய்திக் குறிப்பில், 'நிலநடுக்கத்தால் இதுவரை 1,644 பேர் உயிரிழந்துள்ளனர். 3,400-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து பல்வேறு மருத்துவமனைகள், மருத்துவ முகாம்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 139 பேரை இதுவரை காணவில்லை' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, மியான்மர் சமூக ஆர்வலர்கள் அளித்த தகவல்களின்பேரில் சர்வதேச ஊடகங்கள், நிலநடுக்க பாதிப்பு குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளன.

'ராணுவ ஆட்சி நடைபெறுவதால் மியான்மர் நாட்டின் நிலநடுக்க பாதிப்புகள் குறித்த முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை. எங்களது கணிப்பின்படி, மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளது. ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்திருக்கக்கூடும். சுமார் 2 கோடிக்கும் மேற்பட்டோருக்கு நிவாரண உதவி தேவைப்படுகிறது.

தற்போது ராணுவ ஆட்சி நடைபெறும் பகுதிகளுக்கு மட்டுமே சர்வதேச மீட்பு படை வீரர்கள் சென்றுள்ளனர். 'அரக்கான்' படையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு யாரும் செல்ல முடியாது.

அந்த படையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலநடுக்க பாதிப்புகள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை' என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதேபோல், ஆயிரக்கணக்கான மக்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என மியான்மரில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள், பணியாளர்கள் கருதுகின்றனர்.

பல இடங்களில் சாலைகள் சேதம் அடைந்ததாலும், தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்க முடியாமல் மியான்மர் ராணுவ நிர்வாகம் திணறி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, மியான்மரில் நிலநடுக்கத்தால் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான போதுமான மருந்துகள் அங்கு இல்லாததால் பாதிப்பு மிகவும் மோசமடையக் கூடும் என ஐ.நா அச்சம் தெரிவித்துள்ளது. இந்தப் பின்னணியில், மியான்மரில் பூகம்ப பலி எண்ணிக்கை மென்மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# இன்று ரம்ஜான் பண்டிகை: எடப்பாடி பழனிசாமி உள்பட தமிழக தலைவர்கள் வாழ்த்து

**சென்னை, மார்ச் 31-**

ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்திகள்:

**எடப்பாடி பழனிசாமி:**



இஸ்லாமியப் பெருமக்கள் மன மகிழ்ச்சியுடன் கொண்டாடும் ஈகைத் திருநாளாம் ரம்ஜான் திருநாளில், அனைவருக்கும் எனது இனிய ரம்ஜான் திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஏழை, எளியோருக்கு உணவு வழங்கி, தாமும் உண்டு, உள்ளம் மகிழும் இனிய திருநாள் ரம்ஜான் திருநாள் ஆகும். 30 நாட்கள் பகலில் பருகாமலும், உண்ணாமலும் நோன்பு இருந்து, தீய எண்ணங்கள் அனைத்தையும் அழித்து இறைவனை வழிபட்டு, அனைவரும் நலம் பெற்று வாழ வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் இஸ்லாமியப் பெருமக்கள் ரம்ஜான் திருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில், இஸ்லாமியப் பெருமக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாமியப் பெருமக்களின் பாதுகாவலராக `அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்றென்றும் இருக்கும் என்பதை இந்த இனிய நாளில் உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

``பசித்தவர்களுக்கு உணவளியுங்கள்; பிணியுற்றவரைச் சென்று பாருங்கள்; துன்புறுத்தப்பட்டவர்களுக்கு உதவி புரியுங்கள்; அண்டை அயலாரிடம் அன்பாக இருங்கள்'' என்று, நபிகள் நாயகம் அவர்கள் இஸ்லாமியப் பெருமக்களுக்கு ஆழ்ந்த சகோதரத்துவம் குறித்து எடுத்துரைத்துள்ளதை அனைவரும் பின்பற்றி வாழ்ந்திட வேண்டும்.

`தூய்மையும், பக்தியும் உள்ளதாய், பாவங்களற்றதாய், பொறாமை, அத்துமீறல் இல்லாத இதயமே பரிசுத்தமான இதயம்' என்று நபிகள் நாயகம் உலகிற்குப் பறைசாற்றி உள்ளதை அனைவரும் நினைவில் கொண்டு, தங்கள் கடமைகளைச் செவ்வனே மேற்கொண்டு வாழ வேண்டும் எனத் தெரிவித்து, பிறை கண்டு பெருநாள் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்களின் வாழ்வு, என்றென்றும் வளர் பிறையாக ஒளிர வேண்டும் என்று மனதார வாழ்த்தி, இந்த இனிய திருநாளில் என் அன்பிற்கினிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாஆகியோரது தூய வழியில், இதயம் நிறைந்த ரம்ஜான் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்

**வைகோ:**



மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, "ஒன்றே குலம்; ஒருவன் மட்டுமே இறைவன் என அறிவித்து, இஸ்லாம் மார்க்கத்தை நிலை நிறுத்தினார் அண்ணலார் முகமது நபி (ஸல்). ரமலானின் ஒவ்வொரு நாளிலும் மகத்தான யுத்தங்கள், மாபெரும் வெற்றி நிறைந்த சரித்திரங்கள், பெருமை மிக்க வேதங்கள் பல இறங்கியதும், பெருமானார் (ஸல்) பங்கேற்ற பத்ருப் போர் வரை, ஏராளமான படிப்பினைகளும் உண்டு.

காய்ந்த குடல்கள், காலியான வயிறு, பசியின் அகோரத்தைப் புரிய வைக்கின்ற ரமலான் மாதம் தருகின்ற படிப்பினை, வறியோர்க்கு உதவிக் கரம் நீட்டுங்கள் என்பதாகும். அதன்படி, ஏழை, எளிய மக்களுக்கு ஜக்காத் என்னும் நன்கொடைகளை வாரி வழங்கி, ஈதுப் பெருநாளில் மகிழ்ச்சியில் திளைக்கின்ற இஸ்லாமியப் பெருமக்களுக்கு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

**செல்வப்பெருந்தகை:**



பன்முக கலாச்சாரத்தின் அடிப்படையில் இந்தியாவிற்கென்று ஒரு கருத்தியலை மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கர் போன்றவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு சட்ட பாதுகாப்பு கொடுக்கிற வகையில் அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அரசமைப்புச் சட்டத்தின்படி தான் ஆட்சி செய்ய வேண்டும். இதன்மூலம் சிறுபான்மை மக்களுக்கு மதசுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

சிறுபான்மையினர் எதிர்கொள்கிற ஆபத்திலிருந்து அவர்களை பாதுகாக்க தலைவர் ராகுல்காந்தி தலைமையில் நாடு முழுவதிலுமுள்ள மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகள் ஓரணியில் திரண்டு சிறுபான்மை மக்களின் உரிமைகளை காப்பார்கள். காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை, அனைத்து மக்களையும் ஜாதி, மத, பேதமில்லாமல் சமமாக கருதுவது தான் மதச்சார்பின்மை என்பதை ரமலான் செய்தியாக தமிழக காங்கிரஸ் கட்சி கூற விரும்புகிறது. எனவே, இந்த ரம்ஜான் பெருநாளில் அனைவருக்கும் கொடை வழங்கி, அவர்களுடன் உணவருந்தி மகிழும் இஸ்லாமிய பெருமக்கள், தங்கள் வாழ்வில் மகிழ்ச்சியும், ஏற்றமும் பெற வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் இனிய ரம்ஜான் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ராமதாஸ்:**



வாழ்வில் நன்மைகளை மட்டுமே செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் இரமலான் திருநாளை உலகெங்கும் கொண்டாடும் இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கு இதயங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ரமலான் திருநாள் என்பது ஒரு புனிதமான அனுபவம் ஆகும். இஸ்லாம் எத்தகைய நன்னெறிகளை கற்பிக்கிறதோ, அவை அனைத்தையும் இஸ்லாமியர்கள் கடைபிடிக்கும் காலம் தான் இரமலான் திருநாள் ஆகும். இஸ்லாம் கற்பிக்கும் நன்னெறிகளில் முதன்மையானது மதுவை விலக்குதல் ஆகும். மது அருந்துவதும், மதுவை உற்பத்தி செய்து விற்பதும் சாத்தானின் செயல்கள் என்று நன்னெறி நூலான திருக்குர்ஆன் கூறுகிறது.

ஈகைத் திருநாளின் நோக்கம் என்பது அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; நிம்மதியாக வாழ வேண்டும் என்பது தான். இஸ்லாம் மார்க்கமும் இதைத் தான் உணர்த்துகிறது. ஆனால், இந்த எண்ணங்களுக்கு மாறாக மது என்ற சாத்தானின் ஆதிக்கம் தான் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடுகிறது. மது அரக்கனை ஒழிக்கும் நாளில் தான் தமிழ்நாடு புனிதம் பெறும். அந்த எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டும்; உலகெங்கும் வாழும் மக்களிடம் அன்பு, நல்லிணக்கம், சகிப்புத் தன்மை, சகோதரத்துவம், ஈகை உள்ளிட்ட நற்குணங்கள் பெருகவும், அமைதி, வளம், முன்னேற்றம், ஒற்றுமை, மகிழ்ச்சி ஆகியவை தழைக்கவும் உழைக்க இந்த புனிதமான நாளில் நாம் அனைவரும் உறுதியேற்போம் என்று கூறி மீண்டும் ஒரு முறை வாழ்த்துகிறேன்.

**அன்புமணி ராமதாஸ்:**



ஈகைத் திருநாள் என்று போற்றப்படும் ரமலான் திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய சொந்தங்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாம் போதிக்கும் இந்த நற்குணங்கள் அனைத்தும் உலகமெங்கும் நிறைய வேண்டும். உலகில் அமைதி, வளம், மகிழ்ச்சி, கல்வி, வளர்ச்சி நல்லிணக்கம், சகிப்புத் தன்மை, சகோதரத்துவம் ஆகியவை பெருகுவதற்காக பாடுபடுவதற்கு இந்த நன்நாளில் அனைவரும் உறுதி ஏற்போம் என்று கூறிக் கொண்டு இஸ்லாமிய சொந்தங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே.எம். காதர் மொகிதீன் (இ.யூ.முஸ்லிம் லீக்):**

ரமலான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும். இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்துவிடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும்போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கணும் பரவ வேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறோம்.

ஒன்றே குலம் ஒருவனே தேவனும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், யாதும் ஊரே யாவரும் கேளிர், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரமலான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.

இவ்வாறு பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

# நேபாளத்தில் வன்முறை எதிரொலி: முன்னாள் மன்னரின் பாதுகாப்பு குறைப்பு

**காத்மாண்டு, மார்ச் 31-**

நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சி கோரி காத்மாண்டுவில் நடைபெற்ற போராட்டத்தின்போது வன்முறை ஏற்பட்டதை அடுத்து முன்னாள் மன்னரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சி முறை கடந்த 2008-ம் ஆண்டு முடிவுக்கு வந்தது. நாட்டின் கடைசி மன்னரான ஞானேந்திர ஷா (வயது 77), காத்மாண்டுவில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். மன்னராட்சி ஒழிக்கப்பட்டபின் அரசியல் ஸ்திரமின்மை நிலவுகிறது. 16 ஆண்டுகளில் 14 அரசாங்கங்கள் உருவாகி உள்ளன. பொருளாதார வளர்ச்சியிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சி கோரி, முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷாவின் ஆதரவாளர்கள் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் களத்தில் இருந்து விலகியிருந்த முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷா, சமீபகாலமாக தனது ஆதரவாளர்களுடன் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.



தலைநகர் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தின் போது வன்முறை ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் அலுவலகத்தைத் தாக்கிய நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள், வாகனங்களுக்கு தீ வைத்து, கடைகளை சூறையாடினர்.

வன்முறைகளை தடுக்க முயன்ற காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தலைநகர் காத்மாண்டுவில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்குள்ள நேபாள நாடாளுமன்ற கட்டிடம் மீது கற்களை வீசி தாக்க முயன்றனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் காயமடைந்தனர்.

இந்த வன்முறையில் ஒரு போராட்டக்காரர் மற்றும் ஒரு செய்தியாளர் ஆகியோர் உயிரிழந்தனர். வன்முறைகளில் ஈடுபட்ட 105 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த வன்முறைகளுக்கு முன்னாள் மன்னர் ஞானேந்திரா பொறுப்பேற்க வேண்டும் என நேபாள காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. மன்னராட்சிக்கு ஆதரவான நடவடிக்கைகள், இந்து ஆதரவு போராட்டக்காரர்களின் பின்னணியில் ஞானேந்திரா இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் புஷ்ப கமல் தஹால் குற்றம்சாட்டினார்.

வன்முறை சம்பவங்கள் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், முன்னாள் மன்னர் ஞானேந்திர ஷாவின் பாதுகாப்பை அரசாங்கம் குறைத்துள்ளது. அவரது வீட்டிற்கான பாதுகாப்பு படை வீரர்களின் எண்ணிக்கை 25-ல் இருந்து 16 ஆக குறைக்கப்பட்டது. ஞானேந்திராவின் பாதுகாப்பு வீரர்களின் குழுவையும் அரசாங்கம் மாற்றியமைத்துள்ளதாகவும், அவரது நடவடிக்கைகளை கண்காணித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர், மார்ச் 31-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 587 கன அடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று (மார்ச் 30) காலை 108.25 அடியில் இருந்து 108.20 அடியாக சரிந்துள்ளது.

அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 425 கன அடியிலிருந்து வினாடிக்கு 587 கன அடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் இருப்பு 75.87 டிஎம்சியாக உள்ளது.

# பிரதமர் மோடி அரசின் முயற்சியால் வெளிநாட்டு சிறைகளில் இருந்து 10 ஆயிரம் இந்தியர்கள் விடுதலை

**புதுடெல்லி, மார்ச் 31-**

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் ராஜதந்திர முயற்சிகளின் பலனாக கடந்த 2014 முதல் வெளிநாட்டு சிறைகளில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் விடுதலை பெற்றுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

இதுகுறித்து மத்திய அரசின் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த 2014 முதல் பிரதமர் மோடி தலைமையிலான அரசு வெளிநாடுகளில் உள்ள இந்திய குடிமக்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. தூதரக பேச்சுவார்த்தை மற்றும் உயர்நிலை தலையீடுகள் மூலம் வெளிநாட்டு சிறைகளில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் விடுதலை பெற்று பத்திரமாக நாடு திரும்புவதை உறுதி செய்துள்ளது. ரமலான் பண்டிகையை முன்னிட்டு இந்திய கைதிகள் 500 பேருக்கு ஐக்கிய அரபு அமீரக அரசு மன்னிப்பு வழங்கியுள்ளது. யுஏஇ அரசின் இந்த முடிவு, யுஏஇ – இந்தியா இடையிலான நெருக்கமான ராஜதந்திர உறவை நிரூபிக்கிறது.

இந்த வெற்றிகரமான முயற்சிகள் இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய ராஜதந்திர அந்தஸ்தையும், வெளிநாடுகளில் உள்ள இந்திய குடிமக்களை பாதுகாப்பதில் மோடி அரசின் இடைவிடாத அர்ப்பணிப்பையும் காட்டுகின்றன. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார். தமிழக மீனவர்கள் விடுவிப்பு: பிரதமர் மோடி அரசின் ராஜந்திர முயற்சியால் இந்திய குடிமக்கள் விடுவிக்கப்பட்ட முக்கிய நிகழ்வுகள் வருமாறு: கடந்த 2022 முதல் யுஏஇ நாட்டில் இருந்து 2,783 இந்திய கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சவுதி அரேபிய பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் கடந்த 2019-ல் தனது இந்திய பயணத்தின்போது 850 இந்திய கைதிகளை விடுவிக்க உத்தரவிட்டார். 2023-ல் கத்தாரில் இருந்து இந்திய கடற்படை வீரர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஈரான் அரசு கடந்த 2024-ல் 77 இந்தியர்களையும், 2023-ல் 12 மீனவர்கள் உள்ளிட்ட 43 இந்தியர்களையும் விடுவித்தது. 2019-ல் பிரதமர் மோடியின் வருகையின் போது பஹ்ரைன் 250 இந்தியர்களுக்கு மன்னிப்பு வழங்கியது. 2017-ல் குவைத் அமீர் 22 இந்தியர்களை விடுவித்தார். 97 பேருக்கு தண்டனைகளை குறைத்தார்.

மத்திய அரசின் தொடர் முயற்சிகள் காரணமாக இலங்கை அரசு கடந்த 2014 முதல் 3,697 இந்திய மீனவர்களை விடுதலை செய்துள்ளது. இதுபோல் பாகிஸ்தான் கடந்த 2014 முதல் 2,638 இந்திய மீனவர்களையும் 71 இந்திய கைதிகளையும் விடுதலை செய்துள்ளது.

**31-03-2025**




**மேஷம்:-** பேச்சிலேயே அல்வா கிண்ட, ஆதாயம் அடைவீர்கள். வாய்க்கு ருசியாக வக்கணையாக சாப்பிட ஆர்வம் கொள்வீர்கள். புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி என அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம்.

**ரிஷபம்:-** இன்று, நிம்மதி என்றால் என்ன என்று தேட வேண்டிய நிலை ஏற்படும். பெண்களால் பணவிரயம் ஏற்படும். இயலாமையால் அனைவரின் மேலும் ஒரு தேவையற்ற வெறுப்பு ஏற்படும்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படும் அனுகூலமான நாள். தனவரவு அதிகரிக்கும், பெண்களிடம் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். டாக்டர்கள் கைவிட்ட கேஸ் கூட துள்ளி எழும். நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்.

**கடகம்:-** இன்று, வியாபாரம் மற்றும் தொழில் விருத்தி ஏற்படும் நாள். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** பக்தி மயமான நாள். தெய்வ பக்தியால் மன நிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**கன்னி:-** நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், உறவுக்குள் குழப்பம் உண்டாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியிடத்தில் சாதகமான சூழல் உருவாகும்.

**துலாம்:-** இன்று எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். இனிமையான, மற்றும் சாதுர்யமான பேச்சாற்றலால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**விருச்சிகம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியம் கொண்டாட்டங்கள் நிறைவேறும்.

**தனுசு:-** பங்குச்சந்தை விவகாரங்களில் நாட்டம் ஏற்படும். எவ்வளவு நன்றாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. தங்கள் உடமைகளை பாதுகாப்புடன் வைத்துக் கொள்வது நல்லது.

**மகரம்:-** இன்று, சுமாரான நாள். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள். முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். வயிறு சம்பந்தமான உபாதைகள் எழலாம்.

**கும்பம்:-** இன்று, எல்லா முயற்சிகளிலும் எளிதில் வெற்றி கிட்டும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். குழந்தைகள் பால் அன்பைப் பொழிவார்கள். புதிய நண்பர்கள் தொடர்பும் உதவியும் கிடைக்கும்.

**மீனம்:-** கவனமாகப் படித்தால் கல்வியில் தேர்ச்சி பெறலாம். வாக்குவாதங்களை தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்பு தேவை.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இந்திய கலாச்சாரத்தின் ஆலமரம் ஆர்.எஸ்.எஸ்.

## நாக்பூரில் பிரதமர் மோடி பெருமிதம்



**நாக்பூர், மார்ச் 31-**

ஆர்.எஸ்.எஸ். இந்தியாவின் அழிவில்லாத கலாச்சாரம் மற்றும் நவீனமயமாக்கலின் ஆலமரம் என்று நாக்பூரில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதப்பட்டுள்ளார்.

பிரதமர் மோடி மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். நிறுவனர்களான கேசவ் பலிராம் ஹெட்கேவர், எம்.எஸ். கோல்வால்கர் ஆகியோரின் நினைவிடங்களுக்கு சென்று அஞ்சலி செலுத்தினார். பின்பு அங்கு மாதவ் நேத்ராலயா பிரிமியம் மையத்துக்கு அடிக்கல் நாட்டினார். நரேந்திர மோடி பிரதமரான பின்னர் ஆர்.எஸ்.எஸ். மையத்துக்குச் செல்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அங்கு நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் பேசியதாவது: தகுதி வாய்ந்த மருத்துவர்களை உருவாக்கி நாட்டு மக்களுக்கு சேவை செய்வதே அரசின் குறிக்கோள். நாடு தனது பாரம்பரிய மருத்துவ அறிவுடன் புதுமையான மருத்துவ அறிவினை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது. நமது யோகா, ஆயுர்வேதம் உலகில் புதிய அடையாளத்தை உருவாக்கியுள்ளன.

ஆயுஷ்மான் பாரத் மூலமாக கோடிக்கணக்கான மக்கள் இலவச மருத்துவச் சேவையை பெறுகிறார்கள். லட்சக்கணக்கான ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் திறக்கப்பட்டுள்ளன. இப்போது கிராமத்தில் உள்ளவர்கள் மருத்துவச் சோதனைக்காக 1000 கி.மீ தூரம் செல்ல வேண்டியது இல்லை.

அதேபோல் ஸ்மிருதி மந்திருக்கு சென்றது குறித்து பேசிய பிரதமர், இந்த ஆண்டு ஆர்.எஸ்.எஸ். தனது நூறு ஆண்டு பயணத்தை நிறைவு செய்கிறது. இந்த சிறப்பான நாளில் ஸ்மிருதி மந்திருக்கு செல்லும், டாக்டர் சாகேப் மற்றும் குருஜிக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கம், இந்தியாவின் அழியாத கலாச்சாரம் மற்றும் நவீனமயமாக்கலின் ஆலமரம்'' என்று தெரிவித்தார்

அதேபோல் தீக்ஷா பூமி சென்றது குறித்து பேசிய பிரதமர் மோடி இன்று நான் தீக்ஷா பூமிக்குச் சென்று பாபாசாகேப்பை வணங்கி அவரின் ஆசிர்வாதத்தினை பெற்றேன். இந்த மகத்தான தலைவர்களை வணங்கி நவராத்திரி மற்றும் பிற விழாக்களுக்கு எனது வாழ்த்தினை நாட்டுமக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.'' என்றார்.

# உ.பி. ஆறுகளில் விரைவில் கப்பல் போக்குவரத்து தொடக்கம்

**புதுடெல்லி, மார்ச் 31-**

உத்தர பிரதேசத்தில் கங்கை-யமுனை உட்பட 11 தேசிய நீர்வழிகள் உள்ளன. இவை உ.பி.யை மற்ற மாநிலங்களுடன் இணைக்கின்றன. இதன் காரணமாக மாநிலத்தில் நீர்வழி போக்குவரத்து மற்றும் நீர்வழி சுற்றுலாவை முதல்வர் யோகி அரசு மேம்படுத்தி வருகிறது. முதல் கட்டமாக 11 ஆறுகளில் 761 கி.மீ. தொலைவுக்கு நீர்வழி பாதையை அரசு அமைக்க உள்ளது.

இத்திட்டத்தின்படி 11 ஆறுகளின் படித்துறைகளில் தளங்கள் மற்றும் பிற ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளன. இதை அமல்படுத்த உள்நாட்டு நீர்வழி ஆணையத்தை உ.பி. அரசு உருவாக்கி உள்ளது. நீர்வழிப் பாதையை அமைக்க பிரயாக்ராஜ், வாராணசி முதல் காஜிபூர் வழியாக ஹால்டியா வரையிலான பாதை கங்கை ஆற்றில் தயாராக உள்ளது. அடுத்த கட்டத்தில் கான்பூர் வழியாக பரூக்காபாத் வரை நீட்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல், யமுனை, சரயு மற்றும் காக்ரா, கோமதி, சம்பல், பெத்வா, வருணா, கர்மனாஷா, ரப்தி, மந்தாகினி மற்றும் கென் ஆகிய ஆறுகளிலும் நீர் சுற்றுலாவின் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

இதற்காக, பொதுப்பணி, சுற்றுலா மற்றும் கலாச்சாரம், நீர்ப் பாசனம் மற்றும் நீர்வளம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை சேர்ந்த பொறியாளர்கள் குழுவை மாநில அரசு அமைத்துள்ளது. இக்குழு 11 ஆறுகளின் தோற்றம் முதல் அவை பெரிய நதியுடன் இணையும் இடம் வரை இந்த அனைத்து குழுக்களும் ஒரு கணக்கெடுப்பை நடத்தும்.

நீர்வழிப் போக்குவரத்து மூலம் பொருட்கள் மற்றும் பயணிகளை எங்கெங்கு அழைத்து செல்வது பொருத்தமாக இருக்கும் என்று இக்குழு கண்டறியும். இத்திட்டத்துக்கு முதல்வர் யோகி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## நண்பர்களின் ரூ.16 லட்சம் கோடி கடன் ரத்து:

# பா.ஜ.க. அரசு மீது ராகுல் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, மார்ச் 31-**

''கோடீஸ்வர நண்பர்களின் ரூ.16 லட்சம் கோடி கடனை பா.ஜ.க. அரசு தள்ளுபடி செய்துள்ளதால் வங்கித்துறை உழியர்கள் மன அழுத்தத்துடன் பணியாற்றுவதாக மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் கூறியுள்ளார்.

ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் பணியாற்றிய முன்னாள் ஊழியர்கள் குழு, மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசியது. இதன்பின் எக்ஸ் தளத்தில் ராகுல் கூறியிருப்பதாவது:

பா.ஜ.க. அரசின் தவறான நிர்வாகத்தால் வங்கி ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு தனது கோடீஸ்வர நண்பர்களின் ரூ.16 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்துள்ளது. பா.ஜ.க. அரசின் தவறான நிர்வாகத்தால், நேர்மையான ஊழியர்கள் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வங்கித்துறையும் சிக்கலான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த சுமையை ஜூனியர் ஊழியர்கள் சமாளிக்க வேண்டியுள்ளதால், அவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

மோசமான சூழ்நிலையில் அவர்கள் பணியாற்றுகின்றனர். வங்கி கடனை திருப்பிச் செலுத்தாவர்களுக்கு கடன் அளிப்பதை வெளிப்படுத்தினால், பணியிடமாற்றம், டிஸ்மிஸ் போன்ற பிரச்சினைகளை ஊழியர்கள் சந்திக்கின்றனர். இரண்டு சம்பவங்களில் தற்கொலைகள் நடைபெற்றுள்ளன. இதேபோன்ற அநீதிகளை சந்திக்கும் ஊழியர்கள், அவற்றை *https://rahulgandhi.in/awaazbharatki* என்ற இணையதளம் மூலமாக என்னிடம் பகிரலாம். உங்களுக்காக காங்கிரஸ் கட்சி போராடும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 4-வது நாளாக எல்.பி.ஜி டேங்கர் லாரி ஸ்டிரைக்

**சென்னை, மார்ச் 31-**

தொடர்ந்து 4வது நாளாக எல்.பி.ஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாமக்கல்லை தலைமை இடமாக கொண்டு தென்மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது. அந்த சங்க உறுப்பினர்களின் டேங்கர் லாரிகள் மூலம் மத்திய அரசின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சமையல் கியாஸ் சிலிண்டர்களில் நிரப்பும் பாட்டிலிங் மையங்களுக்கு ஏற்றி செல்லப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே எண்ணெய் நிறுவனங்களுடன் நடைமுறையில் உள்ள ஒப்பந்தம் ஆகஸ்டு மாதத்துடன் முடிவடைய உள்ளது. பின்னர் செப்டம்பர் மாதம் முதல் புதிய ஒப்பந்தம் நடைமுறைக்கு வர உள்ளது. இதனிடையே புதிய ஒப்பந்தத்திற்கான விதிமுறைகளில் சில தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும், எனவே விதிமுறைகளை தளர்த்த வேண்டும் எனவும் லாரி உரிமையாளர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

எனினும் கடந்த 24-ந் தேதி வரை எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு சாதகமாக எந்த அறிவிப்பும் வரவில்லை. பின்னர் தென்மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் 27-ம் தேதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்த போராட்டம் தொடங்கியது.

தொடர்ந்து தென் மாநிலம் முழுவதும் நேற்று 4வது நாளாக டேங்கர் லாரிகள் ஸ்டிரைக் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுமார் 4,000-க்கும் மேற்பட்ட எல்.பி.ஜி. கேஸ் டேங்கர் லாரிகள் இயக்கப்படாமல் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## செமி கிரையோஜெனிக்

# இன்ஜின் சோதனை வெற்றி: இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை

**பெங்களூரு, மார்ச் 31-**

எல்.வி.எம்.-3 ராக்கெட்டில் பயன்படுத்தப்படும் செமி கிரையோஜெனிக் இன்ஜினை, வெற்றிகரமாக பரிசோதித்து இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.

எல்.வி.எம். 3 ராக்கெட்டில் தற்போது எல்110 என் திரவ எரிபொருள் இன்ஜின் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் 4 டன்கள் எடையுள்ள செயற்கை கோள்களை புவி சுற்றுவட்ட பாதைக்கு கொண்டு செல்ல முடியும்.

5 டன்கள் எடையுள்ள செயற்கை கோள்களை கொண்டு செல்லும் வகையில் எல்.வி.எம்.-3 ராக்கெட்டில் செமி கிரையோஜெனிக் இன்ஜினை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காக இஸ்ரோவின் திரவ எரிபொருள் இன்ஜின் தயாரிப்பு மையம் (எ.பி.எஸ்.சி.) செமி கிரையோஜெனிக் இன்ஜினை (எஸ்இ-2000) உருவாக்கியது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:

திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ மையத்தில், செமி கிரையோஜெனிக் இன்ஜினின் பரிசோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. எதிர்பார்த்தபடி இன்ஜின் செயல்பாட்டின் அனைத்து பரிசோதனைகளும் சுமூகமாக முடிந்தது. இந்த இன்ஜினில் தொழில்நுட்பம் சவாலானது. குறிப்பிட்ட சில நாடுகள் மட்டுமே கிரையோஜெனிக் இன்ஜின் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்றன. இந்த இன்ஜினின் பாகங்கள் அதிக வெப்பத்தை தாங்கும் வகையிலானது. இந்த பாகங்கள் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கப்பட்டன. இந்த நவீன இன்ஜின் மகேந்திரிகிரியில் உள்ள சோதனை மையத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட என்ஜினில் கூடுதல் பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் செமி கிரையோஜெனிக் என்ஜின் தயாரிக்கும் நிலைக்கு இந்தியா உயர்ந்துள்ளது.

இவ்வாறு இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# தேர்வு பணிகளுக்கு ஆசிரியர்களை அனுப்பாத தனியார் பள்ளி நிர்வாகங்கள் மீது நடவடிக்கை

## தேர்வுத்துறை இயக்குநரகம் எச்சரிக்கை

**சென்னை, மார்ச் 31-**

தனியார் பள்ளி ஆசிரியர்களை பொதுத் தேர்வு பணிக்கு அனுப்பாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்வுத் துறை எச்சரித்துள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 10, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த மார்ச் 3 முதல் 27-ம் தேதி வரை நடந்தது. இதையடுத்து 10-ம் வகுப்புக்கான பொதுத்தேர்வு 3 நாட்களுக்கு முன் தொடங்கியது.

இதற்கிடையே வழக்கமாக பொதுத் தேர்வுக்கான அறை கண்காணிப்பாளர்களாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள். ஆனால், 10-ம் வகுப்பு தேர்வு நடைபெறும் மையங்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் தனியார் பள்ளி ஆசிரியர்களும் தேர்வு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதேநேரம் சென்னை உட்பட சில மாவட்டங்களில் தனியார் பள்ளிகள் ஆசிரியர்களை தேர்வு பணிக்கு அனுப்புவதில்லை என கூறப்படுகிறது.

இதுகுறித்து தேர்வுத்துறை இயக்குநரகம் சார்பில் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், ''பொதுத்தேர்வு பணிக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கட்டாயம் வேலைக்கு வர வேண்டும். தேர்வு பணிக்கு வராமல் இருந்தால் அந்த பள்ளி நிர்வாகங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனவே, பொதுத் தேர்வு பணிக்கு தங்கள் ஆசிரியர்களை தனியார் பள்ளி முதல்வர்கள் அனுப்பிவைக்க வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது.

# செங்கோட்டையனுக்கு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு?

## உள்துறை அமைச்சகம் பரிசீலனை

**சென்னை, மார்ச் 31-**

செங்கோட்டையனுக்கு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு வழங்க மத்திய உள்துறை அமைச்சகம் பரிசீலனை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தே செல்வாக்கு மிக்க தலைவராக திகழும் செங்கோட்டையனுக்கும், எடப்பாடி பழனிசாமிக்கும் இருந்து வந்த பனிப்போர் அத்திக்கடவு-அவினாசி திட்ட நிறைவு பாராட்டுவிழாவின்போது வெடித்தது. சட்டமன்ற நிகழ்வுகளில் கூட எடப்பாடி பழனிசாமியை அவர் சந்திக்காமல் தவிர்த்து வந்தார்.

இந்தச் சூழலில், பா.ஜ.க.வுடன் கூட்டணியே கிடையாது எனக் கூறி வந்த எடப்பாடி பழனிசாமி திடீரென மத்திய மந்திரி அமித்ஷாவை டெல்லியில் சந்தித்தார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் ரகசியமாக டெல்லி வந்து மத்திய மந்திரிகள் அமித்ஷா, நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து சென்றுள்ளார்.

அ.தி.மு.க. சார்பில் ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி மற்றும் சி.வி.சண்முகம், கே.பி.முனுசாமி, வேலுமணி உள்ளிட்டோர் அமித்ஷாவை சந்தித்து சென்ற நிலையில் செங்கோட்டையனும் தனியாக சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு வழங்க மத்திய உள்துறை அமைச்சகம் பரிசீலனை செய்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. செங்கோட்டையன் கோரிக்கை அடிப்படையில், பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து மத்திய புலனாய்வு அதிகாரிகள், உள்துறை அமைச்சகத்திற்கு அறிக்கை வழங்கி உள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய்க்கு கடந்த மார்ச் 14ம் தேதி முதல் 'ஒய்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பெண்கள் பெயரில் சொத்து பதிவுக்கு சலுகை: தமிழக அரசாணை வெளியீடு

**சென்னை, மார்ச் 31-**

தமிழ்நாடு சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு, பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் சொத்துக்களுக்கான பதிவு கட்டணம் 1 சதவீதம் குறைக்கப்படும் என்று அறிவித்திருந்தது. இந்நிலையில் பெண்கள் பெயரில் வீடு, மனை உள்ளிட்ட சொத்துகள் பதிவு செய்யப்பட்டால் 1 சதவீத பதிவுக்கட்டணம் குறைப்பு என்ற பட்ஜெட் அறிவிப்புக்கு தமிழ்நாடு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதன்படி வரும் 01-04-2025 முதல், 10 லட்சம் ரூபாய் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையாச் சொத்துகள், பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்பaளப்படும் பத்திரப் பதிவுகளில் 75 சதவீத பதிவுகள் இந்த அறிவிப்பினால் பயன்பெற இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனித்து போட்டியிடுவதாக அறிவிப்பு:

# விஜய்க்கு சீமான் திடீர் ஆதரவு

**திருச்சி, மார்ச் 31-**

வரும் சட்டமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு தி.மு.க.வை வீழ்த்துவேன் என்ற விஜய் நிலைப்பாட்டை வரவேற்பதாக சீமான் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர் சந்திப்பில் பேசிய நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ''வருகிற சட்டமன்ற தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார் என சி.ஓட்டர் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாங்கள் பல்வேறு தேர்தலில் போட்டியிட்டு 36 லட்சம் வாக்குகளை பெற்றுள்ளோம். ஆனால், எங்கள் கட்சி அந்த கருத்துக்கணிப்பு பட்டியலில் இடம்பெறவில்லை. இதிலிருந்து கருத்துக்கணிப்பின் நேர்மை புலப்படுகிறது. இது கருத்துக்கணிப்பல்ல.. கருத்து திணிப்பு.

நாங்கள் அரசியல் வியாபாரிகள் அல்ல, போராளிகள் வரும் சட்டமன்றத் தேர்தலிலும் தனித்து போட்டியிடுவோம். வரும் சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. தனித்து போட்டியிட்டு தி.மு.க.வை வீழ்த்துவேன் என்ற விஜய் நிலைப்பாட்டை வரவேற்கிறேன். நான் பிரபாகரனை போல தனித்தே நின்று போட்டியிடுவேன். நான் புலி போன்றவன் தனித்தே நின்று போட்டியிடுவேன்.

ஆனால் கூட்டணி வைத்தால் தான் எதிரியை தேர்தலில் வெல்ல முடியும் என்பது சட்டமா அல்லது ஏதேனும் மரபா?.. கூட்டணி இல்லாமல் எப்படி என கேட்பவர்கள், கொள்கை இல்லாமல் எப்படி என கேட்பதில்லை. படை சேர்த்துக் கொண்டு தேர்தலை சந்திப்பவன் அல்ல நான். கூட்டத்தில் ஒரு ஆளாக போட்டியிட துணிவோ, வீரமோ தேவையில்லை, தனித்து நிற்கவும் தான் துணிவும் வீரமும் தேவை. எதிரியை தீர்மானித்து விட்டு தான் களத்தில் இறங்கி உள்ளோம். எந்த குழப்பமும் இல்லை தடுமாற்றமும் இல்லை. இன்னும் 4 மாதத்தில் யார் யாருடன் கூட்டணி வைப்பார்கள் என்பது தெரிந்து விடும். தேர்தலில் நாங்கள் வாங்கப்போவது தி.மு.க., அ.தி.மு.க. ஓட்டு அல்ல, மக்களின் ஓட்டு தான்'' என்று அவர் கூறினார்.

# ஈரோடு அருகே விஷ வாயு தாக்கி இருவர் உயிரிழப்பு

**ஈரோடு, மார்ச் 31-**

ஈரோடு மாவட்டம் பவானி அருகே லட்சுமி நகர் அடுத்துள்ள கோண வாய்க்கால் பகுதியில் வாட்டர் சர்வீஸ் ஸ்டேஷன் ஒன்று செயல்பட்டு வருகிறது. அங்கு போரிக் ஆசிட் டேங்கர் லாரி ஒன்று தூய்மைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், ஊழியர்களான யுவனேந்தல் (55), சக்திவேல் (52) செல்லப்பன் (52) ஆகியோர் டேங்கர் லாரியை சுத்தம் செய்ய முயன்ற நிலையில் மூவரும் திடீரென மயங்கி விழுந்துள்ளனர். உடனடியாக அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்தது தெரியவந்தது.

மூன்றாவது நபர் தற்பொழுது பவானி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பவானி நகர போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பள்ளிகளில் பாதுகாப்பு நடைமுறை குறித்து ஆய்வு நடத்த கோரிய மனு

## தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்

**சென்னை, மார்ச் 31-**

தமிழகம் முழுவதும் பள்ளிகளின் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்ய முன்னாள் நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்க கோரிய பொதுநல வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் பள்ளியில் யு.கே.ஜி. படித்து வந்த 4 வயது சிறுமி, செப்டிக் டேங்கில் விழுந்து உயிரிழந்தார். இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் பாதுகாப்பு நடைமுறைகளை ஆய்வு செய்ய உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில், ஓய்வு பெற்ற ஐஏஎஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு அமைக்க கோரி பா.ஜ.க. வழக்கறிஞர் ஏ.மோகன்தாஸ், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.


இந்த வழக்கு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், நீதிபதி முகமது ஷபீக் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ''சிறப்பு புலனாய்வு குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் என மனுதாரர் கடந்த ஜனவரி 6-ம் தேதி அரசுக்கு மனு அளித்துவிட்டு, போதிய அவகாசம் தராமல் உடனடியாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இதன்மூலம், பொதுநல வழக்கு தாக்கல் செய்யும் நடைமுறையை தவறாக பயன்படுத்தியுள்ளார். செப்டிக் டேங்கில் விழுந்து சிறுமி உயிரிழந்த சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. அதற்காக ஒட்டுமொத்த அரசு நிர்வாகத்தையும் எப்படி குறைகூற முடியும்'' என்று கேள்வி எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து, வழக்கை திரும்ப பெறுவதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதால், மனுவை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். 'வழக்கை மனுதாரர் வாபஸ் பெற்றாலும்கூட, அவரது மனு மீது ஒரு வாரத்தில் பதில் அளிக்கப்படும்' என்று அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

## ஏக்நாத் ஷிண்டே குறித்து சர்ச்சை பேச்சு:

# முன்ஜாமீன் பெற்ற குணால் கம்ரா மீது மேலும் 3 வழக்குகள் பதிவு

**மும்பை, மார்ச் 31-**



முன்ஜாமீன் பெற்ற நிலையில் குணால் கம்ரா மீது மேலும் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காமெடியன் குணால் கம்ரா சமீபத்தில் துணை முதல்-மந்திரி ஏக்நாத் ஷிண்டே குறித்து பாடிய கேலிப்பாடல் சர்ச்சையானது. இதையடுத்து சிவசேனாவினர் குணால் கம்ரா வீடியோ பதிவு செய்த ஸ்டுடியோவை அடித்து நொறுக்கினர். இந்த விவகாரம் குறித்து போலீசார் சிவசேனாவினர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.இதேபோல ஏக்நாத் ஷிண்டேயை 'துரோகி ' எனகூறி பாடல் பாடிய குணால் கம்ரா மீது சிவசேனாவினர் புகார் அளித்தனர்.


இந்த புகார் குறித்து குணால் கம்ரா மீது கார் போலீசார் வழக்குப்பதிவு செய்து இருந்தனர். இந்த வழக்கில் குணால் கம்ரா சென்னை ஐகோர்ட்டில் இடைக்கால முன் ஜாமீன் பெற்று உள்ளார். இந்தநிலையில் ஏக்நாத் ஷிண்டே குறித்து இழிவாக பாடல் பாடியதாக குணால் கம்ரா மீது சிவசேனாவினர் அளித்த புகாரின் பேரில் நாசிக், ஜல்காவ், புல்தானா பகுதிகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்து உள்ளனர். பொது மக்களுக்கு ஆபத்தும் ஏற்படுத்தும் வகையில் பேசுதல், அவதூறு பரப்புதல் ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்குகள் கார் போலீஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்யும் விஷயத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன? சுப்ரீம் கோர்ட்டை அணுகியோ, புதிய சட்டத்தை இயற்றியோ ஆன்லைன் சூதாட்டத்தைத் தடுக்கப் போகிறதா? அல்லது தற்கொலைகள் தொடரட்டும் என்று வேடிக்கைப் பார்க்கப் போகிறதா? என்பதை தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

- அன்புமணி




பா.ஜ.க.வில் 6 ஆண்டுகள் மாநிலத் தலைவர் பதவிக்காலம் நிறைவடைந்த ஒருவர், குறிப்பிட்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் தலைவர் பதவிக்கு வர முடியும். அண்ணாமலை கட்சிக்காக உழைத்து கொண்டிருக்கிறார். செங்கோட்டையன் சந்திப்பு குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

- தமிழிசை



கூட்டணி விஷயத்தில் அமித்ஷாவின் கருத்தே இறுதி கருத்து. நான் அரசியலுக்காக வந்திருப்பது பலருக்காக அல்ல, மக்களுக்கு பணியாற்றவும், பாஜகவுக்கு உழைக்கவும் அரசியலுக்கு வந்திருக்கிறேன். யாரையும் கடந்த காலங்களில் தவறாக விமர்சித்ததில்லை.எனது நிலைப்பாட்டில் என்றும் மாற்றமில்லை.

- அண்ணாமலை



அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் போலவே தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் தனியாக தமிழாசிரியர் பணியிடங்களை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும். தமிழ்ப் படித்து ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வேலையின்றி வாடும் தமிழாசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000 உதவித் தொகையை தமிழக அரசு வழங்க வேண்டும்.

- ராமதாஸ்

# திருவாரூர் மாவட்டம் ஊர்குடி ஊராட்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி

## ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்



**திருவாரூர்,மார்ச்.31-**
திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், ஊர் குடி ஊராட்சியில் ஊராட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும்வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், வானவில் மன்றம், பசுமை தமிழகம், நம்ம பள்ளி பவுண்டேசன், நம்ம பள்ளி, நம்ம பெருமை, எண்ணும் எழுத்தும், கல்லூரி கனவு, மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள்;, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமை பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு தொழில் சார் கடனுதவி வழங்குதல், அர்ச்சகர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம், புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், மேலும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் அவர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தது. இப்புகைப்படக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.







தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் என் கல்லூரி கனவு என்னும் உயர் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சியினை கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் துவக்கி வைத்தார். வருவாய் கோட்டாட்சியர் செ.இலக்கியா , பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவன பதிவாளர் பூ.கு.ஸ்ரீவித்யா , மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.ரவிச்சந்திரன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சி.அண்ணாதுரை மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# நீடாமங்கலத்தில் சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கை தாக்கல் செய்த வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா



**நீடாமங்கலம்,மார்ச்.31-**
நீடாமங்கலம் பல்நோக்கு சேவை இயக்கம் சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா பத்மஸ்ரீ ராமன் தலைமையிலும் ,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், முரளி ,பொறியாளர் சிதம்பரம், கௌரவ தலைவர் சந்தான ராமன் பொருளாளர் ரவிச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் வரவேற்றார் .துணைத் தலைவர் ராஜேந்திரன் ஆண்டறிக்கை வாசித்தார். செயலாளர் ஜெகதீஷ் பாபு அறிமுக உரையாற்றினார். நிகழ்வில் நீடாமங்கலம் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை ,நீர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மறுசுழற்சி பயன்பாடு, காலநிலை மாற்றத்திற்கான தீர்வு, மரங்கள் வளர்ப்பு, நெகிழிப்பை பயன்பாட்டை குறைத்தல், காற்று மாசுபாட்டை தடுத்தல் ,பற்றி பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு செய்யும் விதமாக பல்நோக்கு சேவை இயக்கம் சார்பில் அன்பில் தர்மலிங்கம், டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் , ஆர் வி எஸ் வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பொதுமக்களிடம் விழிப்புணர்வு செய்து ஆய்வறிக்கைகள் தாக்கல் செய்தனர். மாணவர்களது ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து பூண்டி புஷ்பம் கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் விஜயகுமார், வேதியல் துறை பேராசிரியர் முனைவர் தியாகராஜன், கரந்தை தமிழவேல் உமா மகேசுவரனார் கலைக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை சொர்ணரேகா, தேசிய பசுமைப் படை திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நடனம் ஆகியோர் சான்றிதழ் வழங்கினர். நிகழ்வில் சுற்றுச்சூழல் காப்பதில் மனிதர்களது கடமை பற்றியும், மாணவர்கள் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும், உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் சுகாதாரமாக வாழ சுற்றுச்சூழல் முக்கிய பங்கு ஆற்றும் என்றும், காலநிலை மாற்றத்திற்கான தீர்வு மரங்கள் வளர்ப்பு என்றும், காற்று மாசுபாட்டை குறைத்தல் மறுசுழற்சியின் அவசியத்தை உணர்ந்து மறு சுழற்சி செய்யப்பட வேண்டிய பொருள்களை மறுசுழற்சி செய்யப்பட வேண்டும் என்றும் , கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை போக்கும் விதமாக நீரை சிக்கனமாக கையாள வேண்டும் என்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டின் அவசியம் பற்றியும்தமிழ் இலக்கியங்கள் கூறுவது பற்றியும் , கல்லூரி பேராசிரியர்கள் உரையாற்றினார்கள். ஏழு நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு ஆய்வறிக்கை தாக்கல் செய்து விழிப்புணர்வு செய்த 34 மாணவர்களுக்கு பல்நோக்கு சேவை இயக்கம் சார்பில் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது . தேசிய பசுமை படை சார்பாக துணிப்பை வழங்கப்பட்டு நெகிழி பயன்பாட்டை குறைக்க விழிப்புணர்வு செய்யப்பட்டது. நிகழ்வில் பேரூராட்சி தலைவர் ராமராஜ் ,வர்த்தக சங்கத் தலைவர் ராஜாராமன் ,கிரீன்நீடா ஒருங்கிணைப்பாளர்கள் ராஜவேலு , சமூக ஆர்வலர்கள் ஷாஜகான் , ஜெயக்குமார் , பாபு , மற்றும் பல்நோக்கு சேவை இயக்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் .இறுதியில் துணை செயலாளர் செந்தில்குமார் நன்றி உரையாற்றினார்.

# கரூர் நெரூர் வடக்கு, தெற்கு மற்றும் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சிப் பகுதிகளில் ரூ.7.95 கோடி மதிப்பீட்டில் 23 புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்து முடிவுற்ற பணிகள்

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்





**கரூர்,மார்ச்.31-**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, நெரூர் வடக்கு, தெற்கு மற்றும் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சிப் பகுதிகளில் 23 புதிய திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல்,தலைமையில் (30.03.2025) தொடங்கி வைத்தார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஊரகப் பகுதிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரகிறார்கள். இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் ஊராட்சிகளில் உள்ள பொது மக்களுக்கு முழுமையாகவும், விரைவாகவும் கொண்டு சேர்த்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் 2025-26 நிதியாண்டில் ஊரக வளர்ச்சித் துறைக்கு மட்டும் ரூ.29,465 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். குறிப்பாக முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணிகள், கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களுக்காக நிதி ஒதக்கீடு செய்துள்ளார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் நெரூர் வடக்கு ஊராட்சி ஒத்தக்கடை அருந்ததியர் காலனி பகுதியில் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நாடக மேடையினை திறந்துவைக்கப்பட்டது மேலும் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பஞ்சமா தேவி காளியம்மன் கோவில் முன்புறம் வாய்க்கால் பாலம் அமைக்கும் பணியையும், அம்பலக் கவுண்டன் புதூர் காலனியில் ரூ.12.50 லட்சம் மதிப்பில் மினி சமுதாயக்கூடம் அமைக்கும் பணியினையும், சின்ன காளிபாளையம் பகுதியில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைத்து பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணியையும், நெரூர் தெற்கு ஊராட்சி மரவாபாளையம் பகுதியில் சமுதாயக் கூடம் முன்புறம் ரூ.12.00 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேவர் பிளாக் அமைக்கும் பணியனையும், அரங்கநாதன் பேட்டை பழைய பள்ளி வளாகத்தில் ரூ.25.00 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கும் பணிகளையும், பஞ்சமாதேவியில் சிறப்பு திட்டம் (நூலகம்) ரூ.22.00 மதிப்பீட்டில் பொது நூலகம் கட்டிடம் அமைக்கும் பணிகளையும்,

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் பஞ்சமாதேவியில் ரூ.38.60 லட்சம் மதிப்பீட்டில் கரூர் நெரூர் சாலை முதல் பஞ்சமாதேவி காளியம்மன் கோவில் ரோடு வரை சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், நெரூர் பஞ்சமாதேவி ஏடி காலனி ரோடு முதல் கணபதிபாளையத்தில் ரூ.13.36 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், கருங்கல் காலணி முதல் சங்கரன் பாளையம் மின்னாம்பள்ளி சாலை வரை ரூ.35.32 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், சங்கரன் பாளையம் முதல் வாங்கல் குட்டை மரம் சாலை வரை ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாடு செய்யும் பணியினையும், பஞ்சமாதேவி மின்னாம்பள்ளி சாலை 16 கால் மண்டபம் சாலை வழி காட்டூர் தார் சாலை ரூ.22.29 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாடு பனியனையும்,

கரூர் நெரூர் சாலை முதல் கவுண்டன் புதூர் சாலை வரை, பெரிய கவுண்டர் புதூர், அம்பலகவுண்டன்புதூர், புல்ல கவுண்டன்புதூர் பகுதியில் ரூ.35.50 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியனையும், நெரூர் வடக்கு ஊராட்சியில் கரூர் மெயின் சாலை முதல் மின்னாம்பள்ளி நெரூர் சாலை வழி சின்ன காளிபாளையம் வரை ரூ.29.34 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும், நெரூர் தளவாபாளையம் சாலை முதல் மின்னாம்பள்ளி பழையூர்-முனியப்பனூர் வரை ரூ.21.89 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும், நெரூர் தளவாபாளையம் சாலை முதல் மின்னாம்பள்ளி பழையூர் வரை ரூ.30.20 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியிணையும், சேனப்பாடி முதல் பெரிய மோது வரை ரூ.26.79 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும்,

கரூர் நெரூர் சாலை முதல் மின்னாம்பள்ளி நெரூர் பகவதி அம்மன் கோயில் வரை ரூ.9.33 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும், கரூர் நெரூர் ஆர்ச் முதல் பகவதி அம்மன் கோவில் வரை ரூ.19.30 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும், நெரூர் தெற்கு ஊராட்சியில் கரூர் திருமுக்கூடலூர் ரோடு முதல் சதாசிவம் கோவில் வழியாக காவேரி ஆறு வரை ரூ.16.12 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியினையும், நெரூர் வடக்கு ஊராட்சி சின்ன காளிபாளையம் இணைப்பு சாலையினை 25 சதவீதம் கனிம நிதி ரூ.7.00 மதிப்பீட்டில் மேம்பாடு செய்யவும்,

நெரூர் தெற்கு புதுப்பாளையத்தில் உள்ள வடிகாலுக்கு கான்கிரீட் மூடி அமைக்க மாநில நிதி குழு மானியம் ரூ.3.52 லட்சம் மதிப்பீட்டில் பணியினையும் என சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 6 பணிகள் ரூ.92.50 லட்சம் மதிப்பீட்டிலும், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 14 பணிகள் ரூ.321.52 லட்சம் மதிப்பீட்டிலும், பிற திட்டத்தில் 3 பணிகள் ரூ.32.52 மதிப்பீட்டிலும் என மொத்தம் 23 பணிகள் ரூ.7.95 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் முடிவுற்ற பணிகளை மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜய லெட்சுமி, மண்மங்கலம் வட்டாட்சியர் மேகன்ராஜ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# திருமருகலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

**நாகப்பட்டினம்,மார்ச்.31-**
நாகை மாவட்டம் திருமருகலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கட்சியின் ஒன்றிய நிர்வாகக் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,கிளை செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் மகேந்திரன் தலைமை தாங்கினார்.ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் கட்சியின் மாவட்ட பொருளாளர் பாபுஜி கலந்து பேசினார். இதில் நாகையில் ஏப்ரல் மாதம் 3 நாட்கள் நடைபெறவுள்ள அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 30-வது தேசிய மாநாட்டை சிறப்பாக நடத்துவது,தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய 100 நாள் வேலை நிலுவை தொகையை ஒன்றிய அரசு உடனடியாக வழங்கிட கோரி 1-ம் தேதி.திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் விவசாய சங்க ஒன்றிய செயலாளர் தங்கையன், விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் தமிழரசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டையில் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



**கந்தர்வகோட்டை,மார்ச்.31-**
கந்தர்வகோட்டையில் ஒன்றிய பாஜக அரசின் தமிழக விரோத போக்கை கண்டித்து திமுக தலைமைக் கழகத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவிக்கப்பட்டிருந்தது இதன் ஒரு பகுதியாக கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் மங்களா கோவில் பரமசிவம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய தேசிய மகாத்மா காந்தியின் ஊரக ஒரு வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் சம்பள பாக்கி உடனே வழங்கிடு மும்மொழி கொள்கையை திரும்ப பெற்றிடுக கல்விக்கான நிதியை உடனடியாக வழங்கிடு என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் உறுதிமொழி ஏற்றும் ஆர்ப்பாட்டம் செய்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் வழக்கறிஞர் கருப்பையா நகர செயலாளர் ராஜா முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் நியூஸ் ராஜேந்திரன் துவார் திருப்பதி அமைப்பாளர் கலையரசன் ஒன்றிய பொருளாளர் நெப்புகை சரவணன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தாமரை பழனி வேலு எம் எம் முருகேசன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரகாஷ் வன்னியன் பட்டி ராமராஜ் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி ஒன்றிய அவை தலைவர் சுப்பிரமணியன் முன்னாள் ஒன்றிய பிரதிநிதி என் செல்வம் முன்னாள் நகரத்துணைச்செயலாளர் கோமுத்து இளம் திருமுருகு என்கின்ற ரங்கநாதன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# தொகுதி மறு சீரமைப்புக் குறித்து பிரதமர் மோடி தெளிவுப்படுத்தாவிட்டால் விரைவில் போராட்டம் நடத்த வேண்டிய சூழல் ஏற்படும்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி



**அரியலூர்,மார்ச்.31-**
தொகுதி மறு சீரமைப்புக் குறித்து பிரதமர் மோடி தெளிவுப்படுத்தாவிட்டால் விரைவில் போராட்டம் நடத்த வேண்டிய சூழல் ஏற்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்

அரியலூரிலுள்ள திமுக அலுவலகத்தில், ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் அளித்த பேட்டி: தொகுதி மறுசீரமைப்பால், தென் மாநிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார். மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டதினால் இன்றைய தமிழ்நாட்டில் 12 சதவீதம் மக்கள் தொகை குறைந்துள்ளது. பீகார் உள்ளிட்ட வட மாநிலங்கள், வளர்ச்சியில் ஈடுபடாமல் மக்கள் தொகை கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளாமல் 23 சதவீதத்தில் உள்ளனர்.

தமிழகத்தில் வசூலிக்கப்படுகின்ற ஜிஎஸ்டி தொகை பெருமளவு வடமாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதுகுறித்து புள்ளி விவரங்கள் தெரிவித்தும், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இதற்கு மாற்றான பதிலைத் தான் கூறி வருகிறார். அவர் நிதி அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்று நான் கருதிகிறேன்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து, இதுவரை பிரதமர் மோடியும், பாஜக தலைவர்களும் ஒரு தெளிவான அதிகாரப்பூர்வமான பதிலை வெளியிடவில்லை.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து தெளிவாக விளக்க வேண்டும். இல்லாவிட்டால், இது தொடர்ந்து நாம் போராட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். தமிழகத்துக்கு தரவேண்டிய கல்விக்கான நிதி, நூறுநாள் திட்டத்துக்கான நிதி பங்கீடு, ஜிஎஸ்டி உரிய பங்கீடு ஆகியவை உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இதை எல்லாம் வலியுறுத்தி தொடர்ந்து தமிழகம் ஒருமித்த குரலில் ஒலிக்க வேண்டும் . எதையாவது திடீர் என்று அறிவித்து, அதன் மூலமாக ஒரு ஸ்தம்பித்துப் போகின்ற சூழலை உண்டாக்க வேண்டும். பதட்டமான சூழலில் இந்தியாவை வைத்திருக்க வேண்டும் என்பது தான் பாஜகவின் நோக்கமாக இருக்கிறது.

தமிழகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி ஆட்சி காலத்தில் தான் பொறியியல மற்றும் மருத்துவப் படிப்புகள் தமிழில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதைக் கூட அறியாத மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழில் உயர் கல்வி படிப்புகள் கொண்டு வருவோம் என்று கூறுவது மக்களை தொடர்ந்து ஏமாற்றும் செயலாகவே உள்ளது என்றார்.

# கும்பகோணம் கொட்டையூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா



**தஞ்சாவூர்,மார்ச்.31-**
கும்பகோணம் கொட்டையூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா பள்ளி தலைமை ஆசிரியர் இருதயதனராஜ் தலைமையில் நடைபெற்றது. கும்பகோணம் மண்டல குழு தலைவர் ஆசைத்தம்பி, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி, எஸ்எம்சி தலைவி பழனியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக தேசிய நல்லாசிரியர் பன்னீர்செல்வம், நல்லாசிரியர்கள் அறிவுடைநம்பி, மோகன்தாஸ், வரலட்சுமி, ஓய்வு பெற்ற ஆசிரியர் காணிக்கைராஜ், தலைமை ஆசிரியர்கள் மரகதமணி, ரேவதி மஞ்சுளா, பிரசன்னலட்சுமி, சிவதாஸ், மேரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ் மாறன், தமிழ்குமரன், ஆசிரியர்கள் ஹென்றி, புவனேஸ்வரி மற்றும் பிராங்கிளின் உள்பட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மாணவர்களின் பல் திறன் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அனைத்து மாணவர்களுக்கும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பள்ளி ஆசிரியர் கோமல மகேஸ்வரி நன்றி கூறினார்.

# கோடியக்கரை கடற்பகுதியில் மீன்பிடிக்கும் போது கடல் சீற்றத்தால் பைபர் படகிலிருந்து தவறி கடலில் விழுந்த மீனவர் மாயம்

**வேதாரண்யம்,மார்ச்.31-**
வேதாரண்யம் அருகே கோடியக்கரை கடற்பகுதியில் மீன்பிடிக்கும் போது கடல் சீற்றத்தால் பைபர்;படகிலிருந்து தவறி கடலில் விழுந்த மாயமான சீர்காழியைச் சேர்ந்த மீனவர் லெட்சுமணனை தேடும் பணியில் சக மீனவர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் கடலோர காவல் குழும காவல்துறையினர்; விசாரணை நடத்தி வருகின்றனர்

கோடியக்கரையில் தங்கி மீன்பிடித்துவரும் மயிலாடுதுறை மாவட்டம் குட்டியாண்டியூரைச் சேர்ந்த குமார் என்பவரின் பைபர் படகில் சீர்காழி கீழமூவற்கரையைச் சேர்ந்த லெட்சுமணன்(40), நெல்லை மாவட்டம் ஊத்தங்குடியைச் சேர்ந்த சந்தோஷ்(48), கோடியக்கரையைச் சேர்ந்த மகாலிங்கம்(55) ஆகியோர் நேற்று முன்தினம் மாலையில் மீன்பிடிக் சென்றுள்ளனர்

கோடியக்கரைக்கு தென்கிழக்கே 15 கடல்மைல் தொலைவில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது கடல் அலையின் சீற்றம் காரணமாக லெட்சுமணன் படகிலிருந்து எதிர்பாராத விதமாக தவறி கடலில் விழுந்து மாயமானார் லெட்சுமணன் கடலில் விழுந்த போது கருப்பு நிற அரைக்கால் சட்டையும் டி சர்ட்டும் அணிந்திருதார் கடலில் விழுந்த மீனவரை சகமீனவர்கள் வெகுநேரம் வரை தேடிவிட்டு இரவு கரை திரும்பினர் இந்த நிலையில் கடலில் விழுந்த மீனவர் லெட்சுமணனை தேடும் பணியில் சக மீனவர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் கடலோர காவல் குழும போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

தலைகவசம் உயிர் கவசம்

# திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரம், திருக்கண்ணமங்கை ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்ட விதை சேமிப்பு கிடங்கு

## கலெக்டர், எம்.எல்.ஏ. திறந்து வைத்தனர்



**திருவாரூர்,மார்ச்.31-**
திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரம், திருக்கண்ணமங்கை ஊராட்சியில் வேளாண்மை-உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட துணை வேளாண்மை விரிவாக்க மையம் விதை சேமிப்பு கிடங்கினை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி வைத்தார்கள்.

உரம், தார்பாய், நெல் நுண்ணூட்டம் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களை 14 நபர்களுக்கு திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களும் வழங்கி, உரம், பூச்சி கொல்லி மருந்து என வேளாண்மைக்கு தேவையான பொருட்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்த காட்சி அரங்கினை பார்வையிட்டனர் இந்நிகழ்ச்சியில், வேளாண்மைதுறை இணை இயக்குநர் பாலசரஸ்வதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஹேமா ஹைபிசா நிர்மலா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டம் எசனை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கலெக்டர் கிரேஸ் பச்சாவ் திடீர் ஆய்வு



**பெரம்பலூர்,மார்ச்.31-**
பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, எசனை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ சேவைகள் தொடர்பாக கலெக்டர் கிரேஸ் பச்சாவ் 29.03.2025 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் தொடர்பாக அவ்வப்போது கலெக்டர் அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றார்கள். அதன்படி எசனை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர், மருத்துவமனையில் உள்ள உள் நோயாளி பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, மருந்தகம், ஆய்வகம், பேறு கால பெண்களுக்கான கண்காணிப்பறை, தனி வார்டு, கழிவறை ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளிடம் அங்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து கேட்டறிந்தார். பொதுமக்களுக்கு விரைவான, தரமான மருத்துவ சேவைகளை மேற்கொள்ள மருத்துவர் மற்றும் மருத்துவ பணியாளர்களிடம் அறிவுறுத்தினார். பின்னர் மருத்துவமனையில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், வருகை பதிவேடுகள் உள்ளிட்ட பதிவேடுகளை ஆய்வு செய்து தினந்தோறும் சிகிச்சை மேற்கொள்ள வரும் நபர்கள் குறித்து கேட்டறிந்தார். மருத்துவமனையின் அனைத்து பிரிவுகளிலும் அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக கலெக்டர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதா, உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



**தமிழ்நாடுஆளுநர்ஆர்.என்.ரவிமயிலாடுதுறைமாவட்டத்தில் நடைபெறும்பல்வேறுநிகழ்ச்சிகளில்பங்கேற்பதற்காகதிருச்சி விமான நிலையத்திற்கு வருகை தந்ததை முன்னிட்டு கலெக்டர் மா.பிரதீப்குமார்பூங்கொத்து வழங்கிவரவேற்றார்.**

# புளியந்தோப்பு பகுதியில் மனைவிக்கு கத்தி குத்து: கணவர் கைது

**சென்னை மார்ச் 31-**
சென்னை, புளியந்தோப்பு, கன்னிகாபுரம் பகுதியில் வசித்து வரும் ஜெயந்தி, இராயப்பேட்டை பகுதியில் உள்ள மருத்துவமனையில் ஹவுஸ் கீப்பிங் வேலை செய்து வருகிறார். ஜெயந்தியின் கணவர் ராஜேந்திரனுடன் ஏற்பட்ட குடும்ப பிரச்சனையால் கணவரை பிரிந்து தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்று முன் தினம் ஜெயந்தி வீட்டில் இருந்த போது, அங்கு வந்த ராஜேந்திரன் அவதூறாக பேசி கத்தியால் ஜெயந்தியை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இரத்த காயமடைந்த ஜெயந்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் இது குறித்துபுளியந்தோப்பு காவல் நிலைய குழுவினர் வழக்கில் சம்பந்தப்பட்ட ராஜேந்திரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

# வேதாரண்யத்தில் மழை வேண்டி கோடை தீர்த்தவாரி விழா பக்தர்கள் பால்குடம் தண்ணீர் குடம் எடுத்து வழிபாடு



**வேதாரண்யம்,மார்ச்.31-**
வேதாரண்யத்தில் கோடை மழை பெய்ய வேண்டியும், உலக நன்மைக்காகவும் 60ம் ஆண்டு கோடை தீர்த்த வாரி விழா நடைபெற்றது இதையொட்டி வேதாரண்யேஸ்வரர் கோவிலில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று மணிகர்ணிகை தீர்த்தத்திலிருந்து 250க்கும் மேற்பட்ட பக்தர்கள் தண்ணீர் குடம் எடுத்தனர்

ஆண்கள் பெண்கள் என பக்தர்கள் பால் மற்றும் தண்ணீர் குடத்துடன் ஊர்வலமாக சென்று 5 கிலோமிட்டர் தொலைவில் அமைந்துள்ள பக்தர்குள மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது

இந்த சிறப்பு வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்

# வணிகர் சங்க பேரமைப்பின் முன்னாள் தஞ்சை மண்டலத் தலைவர் மறைந்த எஸ்.சிவசுந்தரத்தின் 13-ம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிப்பு



**வேதாரண்யம்,மார்ச்.31-**
வேதாரண்யம் முன்னாள் வர்த்தக சங்கத் தலைவரும், வணிகர் சங்க பேரமைப்பின் முன்னாள் தஞ்சை மண்டல தலைவருமான மறைந்த டாக்டர் எஸ். சிவசுந்தரத்தின் 13-ம் ஆண்டு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது

வேதாரணியம் வர்த்தக சங்க அலுவலக கட்டிட வளாகத்தில் உள்ள மறைந்த டாக்டர் எஸ்.சிவசுந்தரத்தின் திருவுருவச் சிலைக்கு அவருடைய நினைவு நாளையொட்டி வர்த்தக சங்கத் தலைவரும் வணிகர் சங்க பேரமைப்பின் மாநில துணைத் தலைவருமான தென்னரசு தலைமையில் வர்த்தக சங்கத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

பின்னர் நடைபெற்ற நினைவு நாள் நிகழ்ச்சியில் நகராட்சித் தலைவர் புகழேந்தி முன்னாள் தலைமையாசிரியர் ராஜகிருஷ்ணன், மாவட்ட வணிகர் சங்கத் தலைவர் வேதநாயகம், முன்னாள் வணிகர் சங்க மாவட்ட தலைவர் அம்பாள் குணசேகரன் வர்த்தக சங்க செயலாளர் சுபஹானி, பொருளாளர் சீனிவாசன், வழக்கறிஞர்கள் சங்க முன்னாள் தலைவர் அன்பரசு, வர்த்தக சங்க துணைத் தலைவர் சக்திபிரியா ஆறுமுகம், துணைச் செயலாளர்கள் தங்கத்துரை, தமிழழகன், தலைமை ஆசிரியர் புயல்குமார், முன்னாள் அரிமா சங்க தலைவர்கள் பக்கிரிசாமி, சாமிசெட்டி, ரோட்டரி சங்க தலைவர் ஜெயசந்திரன், உள்ளிட்ட வர்த்தக சங்க நிர்வாகிகள் வர்த்தக சங்க செயல்வீரர்கள்;, பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# டிஜேஎஸ்.மெட்ரிக் பள்ளியில் பட்டமளிப்பு விழா



**கும்மிடிப்பூண்டி,மார்ச்.31**
கவரப்பேட்டை அடுத்த பெருவாயல் கிராமத்தி உள்ள டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது .இந்நிலையில், இப்பள்ளியில் கே.ஜி.படித்த மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் நிகழ்ச்சி டி.ஜெ. எஸ் இன்ஜினியரிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந் நி கழ்ச் சிக் கு,டி. ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் தலைவரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமை தாங்கி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பாராட்டி பேசினார். டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் டாக்டர் ஏ.பழனி வாழ்த்திப்பேசினார்.அனைவரையும் பள்ளியின் முதல்வர் பா.ஞானப்பிரகாசம் வரவேற்றார்.கல்விக் குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ.ஆறுமுகம்,கல்விக்குழுமத்தின் துணைத்தலைவர் டி.ஜெ.தேசமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,இயக்குனர்கள் ஆ.விஜய குமார்,ஆ.கபிலன்,தே.தினேஷ்,டி.ஜெ.எஸ்.ஜி.தமிழரசன்,உறுப்பினர்கள் சொ.சண்முகசுந்தரம், ரா.ஜெயக்குமார்,ஆ.ராஜேஷ், கல்விக்குழுமத்தின் நிர்வாக அலுவலர் செ.ஏழுமலை மற்றும் பெற்றோர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

போக்குவரத்து
விதிகளை
மதிக்கவும்

# சென்னையில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்: சென்னை காவல் ஆணையர் நடவடிக்கை

**சென்னை மார்ச் 31-**
சென்னையில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**நடவடிக்கை**

குற்றங்களின் தன்மை கருதி வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ரெட் அலர்ட், மஞ்சள் அலர்ட், ஆரஞ்சு அலர்ட் என வகைப்பாடு பிரிக்கப்பட்டுள்ளது.ரெட் அலர்ட், மஞ்சள் அலர்ட், ஆரஞ்சு அலர்ட் என மைக்கில் சொன்னவுடன் உடனே சோதனையிட செல்ல வேண்டும். ஒவ்வொரு காவல் நிலைய எல்லையிலும் 4 இடங்களில் வாகன தணிக்கை நடத்த போலீசாருக்கு அறிவுறுத்தல். காவல் நிலையங்களில் குழு அமைத்து சென்னை காவல் ஆணையர் அருண் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ரெட், மஞ்சள் அலர்ட் சேர்ந்து வந்தால் லாட்ஜ்களிலும் சோதனை நடத்த வேண்டும் என அறிவுறுத்தல். பயங்கரவாதிகளின் செயல்பாடுகள் நடமாட்டத்தை கண்காணிப்பது ரெட் அலர்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தரவு வந்தவுடன் காவல் நிலையங்களில் உள்ளவர்கள் 4 முக்கிய சந்திப்புகளில் வாகன தணிக்கை செய்ய வேண்டும். ரவுடிகள், முக்கிய பிரமுகர்கள் கொலை, பெரிய அளவில் நகை கொள்ளை சம்பவங்கள் நடந்தால் 3 இடங்களில் வாகன தணிக்கையில் ஈடுபட வேண்டும்.குற்றவாளிகள் தப்பிக்கும் வழிகள் என ஏற்கனவே கண்டறியப்பட்ட 3 இடங்களில் வாகன தணிக்கை செய்வது மஞ்சள் அலர்ட். செயின், செல்போன் பறிப்பு நடந்தால் குற்றவாளிகள் தப்பிக்கலாம் என கருதப்படும் 3 முக்கிய சந்திப்புகளில் வாகன தணிக்கை. ரெட், மஞ்சள் அலர்ட் சேர்ந்து வந்தால் காவல் நிலைய எல்லைகளில் உள்ள லாட்ஜ்களிலும் சேர்த்து சோதனையிட வேண்டும்.

# சென்னையில் கவுன்சிலர்களுக்கான விளையாட்டு போட்டி

**சென்னை மார்ச் 31-**
சென்னை மாநகராட்சி ஆண்டு விளையாட்டு போட்டி , கடந்த 10ம் தேதி முதல், நகரில் பல்வேறு பகுதிகளில் நடந்து வருகிறது. போட்டிகளில், பணியாளர்கள், ஊழியர்கள் மற்றும் கவுன்சிலர்கள் என, 2,416 பேர் பங்கேற்றுள்ளனர்.

இதில் தென் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும் , வளசரவாக்கம் மண்டலம் 151 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர் கணேஷ்பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவிவரம் வருமாறு:- சதுரங்க, டேபில் டென்னிஸ் , இறகு பந்து, நீளம் தாண்டுதல், குண்டு எரிதல்,ஓட்ட பந்தயம், 50 மீட்டர், 100 மீட்டர், 200 மீட்டர் போட்டிகளில் முதல் பரிசும், பெற்றார். இதே போல் கேரம் போர்ட் போட்டியில் இராண்டாவது இடமும், இறகு பந்து இரட்டையர் பிரிவில் இராண்டவது இடமும் பெற்று வெற்றி பெற்றார்.இதனால் மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேசை மற்ற உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# ஒன்றிய பிஜேபி அரசுக்கு எதிரான நமது முதல்வரின் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் குரல் கொடுத்திட வேண்டும்

## எம்.எல்.ஏ பூண்டிகலைவாணன் வேண்டுகோள்



திருவாரூர் மார்ச் 31
தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்திற்குரிய நாடாளுமன்ற இடங்களை குறைக்க முயன்று வரும் ஒன்றிய பிஜேபி அரசுக்கு எதிரான நமது முதல்வரின் நடவடிக்கைகளுக்கு பொது மக்களும், பொது அமைப்புகளும் குரல் கொடுத்திட வேண்டும் என எம்.எல்.ஏ பூண்டிகலைவாணன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது, மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் மறைந்த தலைவர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத்தில் சுய ஆட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதற்கெற்ப திராவிட மாடல் நாயகரான நமது முதல்வர் ஒன்றிய அரசுக்கு தமிழகத்தின் மூலம் எவ்வளவு வருவாய் ஈட்டிகொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு வருவாய் ஈட்டிகொடுத்து வருகிறார்.

அந்தவகையில் தமிழகம் உட்பட தென்மாநிலங்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு மொத்த வருவாயில் 36 சதவிகித வருவாய் கிடைத்து வருகிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்பதே இந்தியாவின் சிறப்பம்சம். 30 கோடி முகமுடையாள் என்ற இந்தியாவின் அன்றைய மக்கள் தொகையை கணக்கில்கொண்டு அன்று பேசப்பட்ட வழக்கு மொழிகள் குறித்து செப்புமொழி பதினெட்டுடையாள் இதில் சிந்தனை ஒன்றுடையாள் என்ற சிறப்புமிக்க இந்திய துணை பெருங்கண்டத்தை மத வாரியாக, மொழி வாரியாக, இன வாரியாக பிளவு படுத்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தோடும், அரசியல் ஆதாயத்தோடும் ஒன்றிய பிஜேபி அரசின் பல்வேறு மோனமான திட்டங்களை தமிழக முதல்வர் எதிர்த்துவருகிறார். மும்மொழி திட்டம் என்ற பெயரில் இந்தி மொழியினை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்துவருவதால் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய கல்விநிதி ரூ 2 ஆயிரத்து 162 கோடி வழங்கப்படவில்லை. இதேபோன்று ஏழை, எளிய தொழிலாளர்களின் நூறு நாள் வேலை திட்டத்திற்கான 4 மாத ஊதிய தொகையாக ரூ 4 ஆயிரத்து 34 கோடி வழங்கப்படவில்லை. பல்வேறு மாநிலங்களில் தாய் மொழி அழிக்கப்பட்டுள்ள இந்த சூழலில் இந்தி திணிப்பு எதிர்ப்பு என்ற நிலையை கையில் எடுத்து தமிழ் மொழியை காப்பது என்ற கடமையுடன் முதல்வர் செயல்பட்டு வருகிறார். அதை கண்டு அச்சம் கொண்ட ஒன்றிய பாஜக அரசு தனது பாசிச ஆட்சிக்கு தமிழகத்தில் கிளம்பும் எதிர்ப்பை முறியடிக்க தொகுதி மறுசீரமைப்பு என்ற ஒரு துறுபிடித்த ஆயுதத்தை மீண்டும் கையில் எடுத்துள்ளனர். 1971ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தென் மாநிலங்களிலும், வட மாநிலங்களிலும் ஒரே மாதிரியான அளவில் தான் மக்கள் தொகை இருந்தது. ஆனால் குடும்ப நலத்திட்டத்தை தமிழகம் உட்பட தென்மாநிலங்கள் அமுல்படுத்திய நிலையில் வடமாநிலங்களில் இந்த திட்டத்தை சரிவர அமுல்படுத்தாததால் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. தற்போது மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழகத்திற்கு மட்டும் 8 தொகுதிகள் குறைவதற்கு வாய்ப்புள்ளது. மத்திய அரசின் குடும்ப நல திட்டத்தினை முழுமையாக அமுல்படுத்தியதால் கிடைத்த தண்டனை போன்று உள்ளது. இதேபோன்றுதான் தென் மாநிலங்களின் நிலைமையும் உள்ளது. தமிழக உட்பட தென்மாநிலங்களில் கால் ஊன்றுவதற்காக இந்த தொகுதி மறுசீரமைப்பை பிஜேபி அரசு கையில் எடுத்துள்ளது. இதனை தடுக்கவே நமது முதல்வர் தென்மாநில முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்கள் கொண்ட ஒழுங்கு நடவடிக்கை கூட்டு குழுவினை கூட்டியதில் அழைப்பு விடுக்கப்பட்ட 65 பேர்களில் 58 பேர் கலந்து கொண்ட நிலையில் இது நமது முதல்வர் மீது இருந்து வரும் நம்பிக்கையை எடுத்து காட்டியதுடன் இந்த கூட்டத்தில் ஓட்டுமொத்த முக்கிய தீர்மானமாக ஒன்றிய அரசின் தொகுதி மறுசீரமைப்பிற்கு கண்டனம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எனவே முதல்வரின் இந்த நடவடிக்கைக்கு தமிழக பொதுமக்கள் மட்டுமின்றி பொது அமைப்பினரும் குரல் கொடுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு எம்.எல்.ஏ பூண்டிகலைவாணன் தெரிவித்துள்ளார்.

# துரைப்பாக்கத்தில் இளைஞர் உயிரிழப்பு கொலை வழக்காக மாற்றம்

**சென்னை மார்ச் 31-**
சென்னை, வேளச்சேரி, பவானி நகர் பகுதியில் ஜீவரத்தினம், என்பவர் வசித்து வந்தார். ஜீவரத்தினம் கல்லுக்குட்டை பகுதியைச்சேர்ந்த ரஞ்சித்குமார் (எ) அப்பு உட்பட சிலருடன் நண்பராக பழகி வந்துள்ளார். ஜீவரத்தினம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த போது, மேற்படி ரஞ்சித்குமார் (எ) அப்புவின் மனைவி ஜீவரத்தினத்தை சிறைக்கு சென்று சந்தித்துள்ளார். இதனால் ஜீவரத்தினத்திற்கும் அப்பு (எ) ரஞ்சித்குமாருக்கும் முன்விரோதம் ஏற்பட்டுள்ளது. ஜீவரத்தினம், அப்பு (எ) ரஞ்சித்குமாரின் மனைவியுடன் பழகி வருவது பிடிக்காமல் கடந்த 28. ந் தேதி அன்று இரவு மேற்படி ஜீவரத்தினத்தை கல்லுக்குட்டை, இந்திரா தெரு பகுதிக்கு வரவழைத்து அப்பு (எ) ரஞ்சித்குமார் அவரது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து தகராறு செய்து கல் மற்றும் கத்தியால் தாக்கி உள்ளார். தாக்குதலில் இரத்த காயமடைந்த ஜீவரத்தினத்தை அருகில் உள்ளவர்கள் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர். இது குறித்து காயமடைந்த ஜீவரத்தினத்தின் பாட்டி பட்டம்மாள் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.ரஞ்சித் குமார் (எ) அப்பு, 2.கோகுல், 3.ரமேஷ் (எ) பவர், 4.புவனேஷ்வர் (எ) அஜய், 5.ஜெகதீஷ் (எ) ஜெயீஸ், ஆகிய 5 பேரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அவர்களிடமிருந்து 2 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட ரஞ்சித்குமார் (எ) அப்பு மீது 8 வழக்குகளும் , ரமேஷ் (எ) பவர் மீது 7 வழக்குகளும், ரமேஷ் (எ) பவர் மற்றும் ஜெகதீஷ் ஆகிய இருவர் மீது தலா 1 வழக்கு உள்ளதும் தெரியவந்தது.

இந்நிலையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஜீவரத்தினம் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் மாலை இறந்து விட்டதால் மேற்படி கொலை முயற்சி வழக்கு கொலை வழக்கு பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டது.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 153/2025**
**நாள் : 17.03.2025**

R.இராமமூர்த்தி,
த/பெ.இராமச்சந்திரன்,
1103, மாரியம்மன்கோவில் தெரு,
அணிக்குறிச்சி,
வெண்மான்கொண்டான்,
அரியலூர்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது அத்தை “தமிழ்செல்வி” என்பவர் கடந்த 13.05.1995 அன்று கும்பகோணம், பாபுராஜபுரம், பர்மா நகர் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

R.இராமமூர்த்தி,
மனுதாரர், அரியலூர்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 151/2025**
**நாள் : 17.03.2025**

R.இராமமூர்த்தி,
த/பெ.இராமச்சந்திரன்,
1103, மாரியம்மன்கோவில் தெரு,
அணிக்குறிச்சி,
வெண்மான்கொண்டான்,
அரியலூர்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாத்தா “ராஜமாணிக்கம்“ என்பவர் கடந்த 07.10.2000 அன்று கும்பகோணம், பாபுராஜபுரம், பர்மா நகர் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

R.இராமமூர்த்தி,
மனுதாரர், அரியலூர்.

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 109/2024**
**நாள் : 27.06.2024**

யசோதா,
த/பெ.தெட்சிணாமூர்த்தி,
3, வாணிபத்தெரு,
வேப்பத்தூர்,
திருவிடைமருதூர்.
– மனுதாரர்
– எதிர் –
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது பாட்டி “மங்களம்பாள்” என்பவர் கடந்த 25.03.1990 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

யசோதா,
மனுதாரர், திருவிடைமருதூர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## ஐ.பி.எல். 10-வது லீக் போட்டி:

# டு பிளெஸ்சிஸ் அபார ஆட்டத்தால் ஐதராபாத்தை வீழ்த்திய டெல்லி



**விசாகப்பட்டினம், மார்ச் 31-**

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற 2 லீக் போட்டிகளில் விசாகப்பட்டினத்தில் நடந்த முதல் போட்டியில் (10-வது லீக் ஆட்டம்) டு பிளெஸ்சிஸ் அதிரடி அரைசதத்தால் ஐதராபாத்தை வீழ்த்தி டெல்லி கேப்பிடல்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

**ஐதராபாத் பேட்டிங்...**

10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. அதில் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் ஆடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற ஐதராபாத் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது.

**163 ரன்னுக்கு ஆல் அவுட்...**

தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 163 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. ஐதராபாத் தரப்பில் அதிகபட்சமாக அனிகேத் வர்மா 74 ரன்கள் எடுத்தார். டெல்லி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 5 விக்கெட்டும், குல்தீப் யாதவ் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். தொடர்ந்து 164 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணியின் தொடக்க வீரர்களாக டு பிளெஸ்சிஸ் மற்றும் பிரேசர் மெக்கர்க் களம் இறங்கினர்.

**டுபிளெஸ்சிஸ் அரைசதம்...**

தொடக்கம் முதலே இருவரும் அதிரடியாக ஆடினர். இதனால் அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. இதில் டு பிளெஸ்சிஸ் அரைசதம் அடித்து அசத்தினார். இந்த இணை முதல் விக்கெட்டுக்கு 81 ரன்கள் சேர்த்த நிலையில் பிரிந்தது. இதில் மெக்கர்க் 8 ரன்னிலும், டு பிளெஸ்சிஸ் 50 ரன்னிலும், அடுத்து வந்த ராகுல் 15 ரன்னிலும் அவுட் ஆகினர். இந்த மூன்று பேர் விக்கெட்டையும் சியாஷன் அன்சாரி வீழ்த்தினார்.

**அபார வெற்றி...**

தொடர்ந்து அபிஷேக் பொரெல் மற்றும் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஜோடி சேர்ந்தனர். இந்த இணை அதிரடியாக ஆடி ரன்கள் குவித்தது. மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்ட இந்த இணை அணியை வெற்றிக்கு அழைத்து சென்றது. இறுதியில் டெல்லி அணி 16 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 166 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக டு பிளெஸ்சிஸ் 50 ரன்கள் எடுத்தார். ஐதராபாத் தரப்பில் சியாஷன் அன்சாரி 3 விக்கெட் வீழ்த்தினார்.

## ஒருநாள், டி-20 தொடர்களில் பங்கேற்பு:

# ஆஸி., செல்கிறது இந்திய அணி



**மும்பை, மார்ச் 31-**

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 டி20 தொடர்களில் விளையாடவுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் தங்களுக்குள் 3 ஒருநாள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளன. இந்த தொடர்களில் விளையாடுவதற்காக இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் உறுதிப்படுத்தியுள்ளது.

**ஒருநாள், டி20 தொடர்...**

இரு அணிகளுக்கும் இடையிலான இந்த தொடர்கள் அக்டோபர் 19 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 8 வரை நடைபெறுகிறது. ஒருநாள் தொடர் முதலில் தொடங்குகிறது. அதன் பின், டி20 தொடர் நடைபெறவுள்ளது.

**ஒருநாள் தொடர் விவரம்:**

முதல் ஒருநாள் - அக்டோபர் 19, பெர்த்

இரண்டாவது ஒருநாள் - அக்டோபர் 23, அடிலெய்டு

மூன்றாவது ஒருநாள் - அக்டோபர் 25, சிட்னி

**டி-20 தொடர் விவரம்:**

முதல் டி20 - அக்டோபர் 29, கேன்பெரா

2-வது டி20 - அக்டோபர் 31, மெல்போர்ன்

3-வது டி20 - நவம்பர் 2, ஹோபர்ட்

4-வது டி20 - நவம்பர் 6, கோல்ட் கோஸ்ட்

5-வது டி20 - நவம்பர் 8, பிரிஸ்பேன்

# ஹர்திக் பாண்ட்யாவுக்கு ரூ.12 லட்சம் அபராதம்

**அகமதாபாத், மார்ச் 31-**

18-வது ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த 9-வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. மும்பை அணியில் தடை காரணமாக கடந்த ஆட்டத்தில் ஆடாத கேப்டன் ஹர்திக் பாண்ட்யா திரும்பினார். இதில் டாஸ் ஜெயித்த மும்பை அணியின் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பீல்டிங்கை தேர்வு செய்தார்.

**குஜராத் வெற்றி...**

அதன்படி முதலில் பேட்டிங் செய்த குஜராத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 196 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 63 ரன்கள் அடித்தார். மும்பை தரப்பில் ஹர்திக் பாண்ட்யா 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இதனையடுத்து 197 ரன் இலக்கை நோக்கி ஆடிய மும்பை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 160 ரன்களே எடுத்தது. இதனால் குஜராத் அணி 36 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 48 ரன்கள் அடித்தார். குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**அபராதம்...**

இந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கவில்லை. இதன் காரணமாக மும்பை இந்தியன்ஸ் கேப்டன் ஹர்திக் பாண்ட்யாவுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து ரூ.12 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சீசனில் 3 முறை இதே தவறை செய்ததால் ஒரு போட்டியில் விளையாட தடை பெற்ற ஹர்திக் பாண்ட்யா, நடப்பு சீசனில் களமிறங்கிய முதல் போட்டியிலேயே அதே தவறுக்காக மீண்டும் தண்டனை பெற்றுள்ளார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 2 | 2 | 0 | 4 | +2.266 |
| 2 | டெல்லி | 2 | 2 | 0 | 4 | +1.320 |
| 3 | லக்னோ | 2 | 1 | 1 | 2 | +0.963 |
| 4 | குஜராத் | 2 | 1 | 1 | 2 | +0.625 |
| 5 | பஞ்சாப் | 1 | 1 | 0 | 2 | +0.550 |
| 6 | கொல்கத்தா | 2 | 1 | 1 | 2 | -0.306 |
| 7 | ஐதராபாத் | 2 | 1 | 1 | 2 | -0.871 |
| 8 | சென்னை | 2 | 1 | 1 | 2 | -1.013 |
| 9 | மும்பை | 2 | 0 | 2 | 0 | -1.163 |
| 10 | ராஜஸ்தான் | 2 | 0 | 2 | 0 | -1.882 |

## இன்றைய ஐ.பி.எல் (12-வது லீக்)



**அணிகள் - மும்பை vs கொல்கத்தா**

**இடம் - வான்கடே(மும்பை) மணி - இரவு 7.30**

## மியாமி ஓபன்: சபலென்கா சாம்பியன்

மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் புளோரிடா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதன் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் பெலாரசின் அரினா சபலென்கா, அமெரிக்கா வீராங்கனை ஜெசிகா பெகுலா உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்தி சிறப்பாக விளையாடிய சபலென்கா 7-5, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார் . இது அரினா சபலென்கா வென்ற முதல் மியாமி ஓபன் பட்டம் ஆகும்.

## சுனில் நரைன் குறித்து குல்தீப் யாதவ்

லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிராக விளையாடிய முதல் போட்டியில் டில்லி கேபிடல்ஸ் அணிக்காக குல்தீப் யாதவ் அபாரமாக பந்துவீசினார். லக்னோவுக்கு எதிராக 4 ஓவர்கள் வீசிய அவர் வெறும் 20 ரன்களை மட்டும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஒரு பந்துவீச்சாளராக நீங்கள் போட்டியில் கண்டிப்பாக ஆதிக்கம் செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஜஸ்பிரித் பும்ரா மற்றும் சுனில் நரைன் போன்ற வீரர்கள் அதனை தொடர்ச்சியாக செய்திருக்கிறார்கள்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடியபோது, சுனில் நரைனிடமிருந்து நிறைய விஷயங்கள் கற்றுக்கொண்டேன். பந்துவீச்சு லென்த்துக்கு அவர் எப்போதும் முக்கியத்துவம் கொடுக்க வலியுறுத்துவார். முன்பெல்லாம், நான் என்னுடைய திறமையை மட்டுமே நம்பி செயல்படுவேன். ஆனால், தற்போது சுனில் நரைன் கூறிய விஷயங்கள் முற்றிலும் சரியானவை என்பதை உணர்கிறேன். நான் என்னுடைய பந்துவீச்சு லென்த்தில் அதிக கவனம் கொடுக்கிறேன். அது எனது பந்துவீச்சில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியது என்றார். பல ஆண்டுகளாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக சுனில் நரைனுடன் இணைந்து விளையாடிய குல்தீப் யாதவ், கடந்த ஆண்டு மெகா ஏலத்தில் டில்லி கேபிடல்ஸ் அணியால் வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## டெல்லி அணிக்காக ஸ்டார்க் சாதனை

18-வது ஐ.பி.எல். தொடரில் விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் - சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் கேப்டன் கம்மின்ஸ் பேட்டிங் தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி 18.4 ஓவர்களில் 163 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக அனிகேத் வர்மா 74 ரன்கள் அடித்தார். டெல்லி தரப்பில் அபாரமாக பந்து வீசிய மிட்செல் ஸ்டார்க் 5 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இதன் மூலம் 18 ஆண்டு கால ஐ.பி.எல். வரலாற்றில் டெல்லி அணி தரப்பில் 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய 2-வது வீரர் என்ற மாபெரும் சாதனையை மிட்செல் ஸ்டார்க் படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஐ.பி.எல்.-ன் தொடக்க சீசனான 2008-ம் ஆண்டு அமித் மிஸ்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தி இருந்தார். அத்துடன் நடப்பு ஐ.பி.எல். தொடரில் 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய முதல் பந்துவீச்சாளராகவும் சாதனை படைத்துள்ளார்.

## அறிமுக போட்டியில் உலக சாதனை

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணியில் முகமது அப்பாஸ் அறிமுக வீரராக களம் மிறங்கினார். இந்த போட்டியில் முகமது அப்பாஸ் 52 ரன்கள் அடித்தார்.

இதில் முகமது அப்பாஸ் இறுதி கட்டத்தில் களமிறங்கி பாகிஸ்தான் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். தலா 3 சிக்சர்கள் மற்றும் பவுண்டரிகள் விளாசிய அவர் வெறும் 24 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதன் மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் அரைசதம் அடித்த அறிமுக வீரர் என்ற உலக சாதனையை படைத்தார். இதற்கு முன்னர் இந்தியாவின் குருனால் பாண்ட்யா 26 பந்துகளில் அரைசதம் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள முகமது அப்பாஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

## இங்கிலாந்தின் அடுத்த கேப்டன்?

பாகிஸ்தானில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி தொடரை வெல்லும் அணிகளில் ஒன்றாக கருதப்பட்ட இங்கிலாந்து அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. இந்த தோல்வி காரணமாக இங்கிலாந்து வெள்ளைப்பந்து கிரிக்கெட் அணிகளின் (ஒருநாள் மற்றும் டி20) கேப்டனாக செயல்பட்டு வந்த ஜாஸ் பட்லர் அந்த பதவியில் இருந்து விலகினார். இதனால் இங்கிலாந்து அணியின் அடுத்த கேப்டன் யார் என்ற கேள்விகள் எழுந்தன. அதில் ஜோ ரூட், ஹாரி புரூக், பென் டக்கெட், பென் ஸ்டோக்ஸ் உள்ளிட்டோர் அடுத்த கேப்டனுக்கான தேர்வில் உள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில், பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஹாரி புரூக் ஆகியோர் இங்கிலாந்து அணியின் அடுத்த வெள்ளைப் பந்து கிரிக்கெட் அணிகளுக்கான கேப்டன் பொறுப்புக்கான போட்டியாளர்கள் என்று அந்த அணியின் முன்னாள் கேப்டன் இயான் மோர்கன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இங்கிலாந்து அணியின் அடுத்த கேப்டன் பதவிக்கு இரண்டு விருப்பங்கள் இருப்பதாக நான் நினைக்கிறேன். பென் ஸ்டோக்ஸை முழுநேர அடிப்படையில் அல்லாமல் பகுதிநேர கேப்டனாக நியமிக்கலாம். அதேசமயம் கடந்த மூன்று நான்கு வருடங்களை நீங்கள் முன்னிலைப்படுத்தினால், ஹாரி புரூக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அவர் மிகவும் சிறப்பாக விளையாடியதாக நினைக்கிறேன். அதனை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளது. அதனால் தலைமைப் பொறுப்பு அவருக்கு சுமையாகத் தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## வெறும் 20 மில்லி செகன்டில்

# உலக சாம்பியன்ஷிப் வாய்ப்பை இழந்த குல்வீர்

**வாஷிங்டன், மார்ச் 31-**

இந்திய வீரர் குல்வீர் சிங் அமெரிக்காவில் நடைபெற்று வரும் உலக தடகள கான்டினென்டல் டூரில் 20 மில்லி செகன்டில் உலக சாம்பியன்ஷிப் தகுதிக்கான வாய்ப்பை இழந்தார்.

**தேசிய சாதனை...**

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் உலக தடகள கான்டினென்டல் டூரில் பங்குபெற்ற இந்திய வீரர் குல்வீர் சிங் 10,000 மீ ஓட்டப் பந்தயத்தில் புதிய தேசிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

**வாய்ப்பை இழந்தார்...**

26 வயதாகும் குல்வீர் சிங் உலக தடகள கான்டினென்டல் டூரில் 20 மில்லி செகன்டில் உலக சாம்பியன்ஷிப் தகுதிக்கான வாய்ப்பை இழந்தார். கடந்தாண்டு ஜப்பானில் ஓடியதைவிட வேகமாக ஓடினாலும் உலக சாம்பியன்ஷிப் தகுதிக்கான வாய்ப்பை 20 மில்லி செகன்டில் ( மில்லி வினாடி) இழந்தது இந்தியர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரது விடியோவை இந்திய தடகள கூட்டமைப்பு தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்து தேசிய சாதனைக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

## தாய்மொழியில் மருத்துவக் கல்வி:

# பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம்

**நாக்பூர், மார்ச் 31-**

தாய்மொழியில் மருத்துவம் பயிலலாம் என்கிற நடைமுறை கொண்டுவரப்பட்டிருப்பது ஏழை மாணவர்களுக்கு மிகவும் பயனளிப்பதாக பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

மகாராஷ்டிரத்தின் நாக்பூரில் அமைந்துள்ள ஆர்.எஸ்.எஸின் நிறுவனத் தலைவர்களின் நினைவிடங்களுக்கு நேற்று (மார்ச் 30) சென்றுள்ள பிரதமர் மோடி அவர்களுக்கு மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய பிரதமர் மோடி: “இந்த உலகம் ஒரே குடும்பம் போன்றது என்கிற நமது தாரக மந்திரமானது உலகின் அனைத்து மூலைகளிலும் சென்றடைந்துள்ளது. இந்திய விடுதலைக்குப்பின் நாங்கள் மிக துணிச்சலான தொரு நடவடிக்கையை எடுத்தோம். அது என்னவென்றால் - ஏழை மாணவர்கள் மருத்துவர்களாக வசதியாக, அவரவர் தம் தாய்மொழியில் மருத்துவம் பயிலலாம் என்பதேயாகும்.

இதுபோன்ற மேம்பாட்டு நடவடிக்கைகளால், மருத்துவத் துறையிலும் நாங்கள், நமது பாரம்பரிய ஞானத்தை முன்னெடுத்துச் செல்கிறோம். நமது யோகா, ஆயுர்வேதா ஆகிய மருத்துவ சிகிச்சை முறைகள், இப்போது ஒட்டுமொத்த உலகத்திலும் புது அங்கீகாரத்தை பெற்றுத் திகழ்கின்றன. இந்தியாவின் மதிப்பும் உயர்ந்து வருகிறது.”

இது எப்படி சாத்தியமானது? பல்வேறு தருணங்களிலும் பல இயக்கங்கள் செயல்பாடுகள் இதை கட்டிக்காத்துள்ளன. குரு நானக் தேவ், கபீர் தாஸ், துளசி தாஸ், சூர் தாஸ், புனித துக்காராம், இன்னும் பலர் அவர்களது தார்மீக மதிப்புகளாலும் நடவடிக்கைகளாலும் நமது தேசிய சுய சிந்தனைக்கு உயிர்கொடுத்துள்ளனர். நம்பிக்கையின்றி துவண்டுபோயிருந்த சமுதாயத்தில் சுவாமி விவேகானந்தர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறார்” என்றார்.

# 100 நாள் திட்டத்தை தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்துகிறது

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தகவல்

**சென்னை, மார்ச் 31-**

100 நாள் வேலை திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடு தான் என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- “100 நாள் வேலையில் முறைகேடு நடைபெறுகிறதா? என்பதை பா.ஜ.க. அரசு விசாரணை ஆணையம் அமைத்து கண்டுபிடிக்கட்டும். இந்தியாவிலேயே 100 நாள் வேலை திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வரும் மாநிலம் தமிழ்நாடு தான்.

தொகுதி மறுசீரமைப்பு மூலம் தென் மாநிலங்களில் தொகுதிகள் குறையாது என்று கூறும் உள்துறை அமைச்சர், வட மாநிலங்களில் தொகுதிகள் கூடாது என்று உறுதியளிக்க தயாரா? அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டின் நலனுக்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்ததாக கூறுகிறார். அதே சமயம், அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி விரைவில் அறிவிக்கப்படும் என்று கூறுகிறார். இதில் யார் பொய் சொல்கிறார் என்பது விரைவில் தெரியும்.” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பராமரிப்பு பணி காரணமாக ஏப். 30 வரை

# தென்காசி - செங்கோட்டை இடையே ரெயில்கள் ரத்து

**நெல்லை, மார்ச் 31-**

பராமரிப்பு பணி காரணமாக தென்காசி- செங்கோட்டை இடையேயான ரெயில்கள் வருகிற ஏப்ரல் 30-ம் தேதி வரை ரத்து செய்யப்பட உள்ளது.

தென்காசி - செங்கோட்டை இடையே பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் வருகிற 1-ந்தேதி முதல் 30-ந்தேதி வரை ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து மற்ற நாட்களில் ரெயில்கள் ரத்து செய்யப்படுகிறது. மதுரையில் இருந்து காலை 7:25 மணிக்கு புறப்படும் வண்டி எண் 56719 மதுரை - செங்கோட்டை பயணிகள் ரெயில் *தென்காசி - செங்கோட்டை இடையே ரத்து செய்யப்படுகிறது. செங்கோட்டையில் இருந்து மதியம் 2:05 மணிக்கு கிளம்பும் வண்டி எண் 56738 செங்கோட்டை - நெல்லை பயணிகள் ரெயில் தென்காசி - செங்கோட்டை இடையே ரத்து செய்யப்படுகிறது.

நெல்லையில் இருந்து காலை 9:50 மணிக்கு கிளம்பும் வண்டி எண் 56735 நெல்லை - செங்கோட்டை பயணிகள் ரெயில் தென்காசி - செங்கோட்டை இடையே ரத்து செய்யப்படுகிறது. செங்கோட்டையில் இருந்து மதியம் 12:45 மணிக்கு புறப்படும் வண்டி எண் : 56720 செங்கோட்டைமதுரை பயணிகள் ரெயில் செங்கோட்டை - தென்காசி இடையே ரத்துசெய்யப்படுகிறது.மேலும் விவரங்களுக்கு அருகே உள்ள ரெயில் நிலையத்திலோ அல்லது என்.டி.இ.எஸ் மூலம் தெரிந்து கொள்ளலாம் இந்தத் தகவலை தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

## காஷ்மீர் என்கவுன்ட்டர்:

# உயிரிழந்த போலீஸாரின் எண்ணிக்கை 4-ஆக உயர்வு

**ஸ்ரீநகர், மார்ச் 31-**

ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் நடந்த என்கவுன்ட்டரில் உயிரிழந்த போலீஸாரின் எண்ணிக்கை 4-ஆக உயர்ந்துள்ளது.


ஜம்மு - காஷ்மீரின் கதுவா மாவட்டம் ராஜ்பாக் பகுதியில் ஜக்கோலே கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக காவல்துறைக்கு 2 நாட்களுக்கு முன்பு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து ஜம்மு காஷ்மீர் போலீஸார், ராணுவத்தினர், மத்திய ரிசர்வ் போலீஸார் அடங்கிய சிறப்பு ஆபரேஷன் குழுவினர் என 4 பிரிவினரும் அப்பகுதிக்கு விரைந்தனர்.

போலீஸார் அப்பகுதியை சுற்றி வளைத்ததை அறிந்த தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டனர். காலை தொடங்கிய இந்தத் துப்பாக்கிச்சூடு மாலை வரை நீடிதத்து. இந்த என்கவுன்ட்டரில் மொத்தம் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதேநேரத்தில் 3 போலீஸார் உயிரிழந்ததாகவும், டிஎஸ்பி உள்பட 7 போலீஸார் காயமடைந்ததாகவும் தெரியவந்தது.

இந்நிலையில் என்கவுன்ட்டர் நடைபெற்ற பகுதியில் மேலும் ஒரு போலீஸ்காரரின் உடலை போலீஸார் கைப்பற்றினர். இதனால் தீவிரவாதிகளுடன் நடந்த என்கவுன்ட்டரில் உயிரிழந்த போலீஸாரின் எண்ணிக்கை 4-ஆக உயர்ந்தது.

நேற்றும் போலீஸாரின் தேடுதல் வேட்டை கதுவா பகுதியில் தீவிரம் அடைந்துள்ளது. கதுவா, அதைச் சுற்றிலுள்ள பில்லாவர் உள்ளிட்ட பகுதிகளில் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# திருவானைக்காவல் கோவிலில் பங்குனி தேரோட்டம் கோலாகலம்



**திருச்சி, மார்ச் 31-**

திருவானைக்காவில் சம்புகேசுவரர் உடனுறை அகிலாண்டேசுவரி திருக்கோயிலில் பங்குனி மண்டல பிரமோற்சவ விழாவின் முக்கிய வைபவமான பங்குனி திருத்தேரோட்டம் நேற்று (மார்ச் 30-ஆம் தேதி) நடந்தது.

பஞ்சபூத தலங்களில் நீர் தலமாக விளங்குவது திருச்சி திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் - அகிலாண்டேஸ்வரி கோவில். திருவானைக்காவல் கோயிலில் பங்குனி மண்டல பிரமோற்ஸவ விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பங்குனி தேரோட்டத்திற்கான எட்டுத்திக்கு கொடியேற்றம் கடந்த 18 ஆம் தேதி நடைபெற்றது. அன்று முதல் தினமும் சுவாமி, அம்மன் காலையில் புறப்பாடு கண்டருளியும், மாலையில் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தும் பக்தர்களுக்கு காட்சியளித்தனர்.

இந்தநிலையில், முன்னதாக அதிகாலை சுவாமி, அம்மனுக்கு உற்சவர் மண்டபத்தில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உற்சவர்கள் ஜம்புகேஸ்வரர் பெரிய தேரிலும், அகிலாண்டேஸ்வரி அம்மன் மற்றொரு தேரிலும் எழுந்தருளினர். தொடர்ந்து காலை 7.10 மணிக்கு ஜம்புகேஸ்வரர் சுவாமி தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். மேல உள்வீதி, வடக்கு உள்வீதி, கீழ உள்வீதி, தெற்கு உள்வீதி ஆகிய பகுதிகளில் தேர் சுற்றி வந்து காலை 10.30 மணிக்கு நிலை நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து அகிலாண்டேஸ்வரி அம்மன் தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டது.

தேரோட்டத் திருவிழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்று தேர்களை வடம்பிடித்து இழுத்து திருவிழாவை சிறப்பித்து வருகின்றனர். இதனால் அப்பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 31.03.2025 முதல் 6.04.2025 வரை

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். மேடைப் பேச்சாளர்களுக்கு தங்கள் பேச்சின் மூலம் வருமானம் கிடைக்கும்.. பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள்.

பரணி --

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து கௌரவம் உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். சிலர். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். செய்தொழில், வியாபாரம் நன்றாக நடந்து இலாபம் பொங்கும். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். தங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். புதிய வீடு, பூமி வாங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயல்படாமல் எதையும் ஆலோசித்துச் செயல்படுவது நல்லது. அரசுப்பணியில் கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். வியாபாரிகள் இலாபத்தை அதிகரிக்க புதிய விற்பனை யுக்திகள் கையாள்வீர்கள்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு உடன் பணிபுரிபவர்கள் மூலம் வேலையில் சிற்சில தொந்தரவுகள் எழலாம். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அலுவலகத்தில் பதவி உயர்வில் பிரச்சனைகள் எழலாம் பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். சொந்த பந்தங்களுக்கிடையே ஒற்றுமை மேலோங்கும்.

ரோகிணி –

இந்த வாரம் மன மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் பணப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், தொழிலில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். பிள்ளைகள் மூலம் நன்மைகள் ஏற்பட்டாலும், தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள். உடன் பிறப்புகளுடன் சுமுகமாக செல்வது நல்லது. இடைவிடாத வேலை பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். அசைவ விரும்பிகளுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம். பழைய கடன்கள் சுலபமாக வசூலாகும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். வட்டிக்கு ஆசைப்பட்டு வங்கி தவிர பாதுகாப்பற்ற பொருளாதாரத் திட்டங்களில் சேமிக்காமல் எச்சரிக்கையுடன் இருந்தால் இழப்பைத் தவிர்க்கலாம். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

திருவாதிரை ---

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய சுற்றுலாப் பயணங்களின் இன்புறுவீர் கள். புதிய நண்பர்களால் பல நன்மைகள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களைக் காண்பீர்கள். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்குப் பணியில் இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரப்பயணங்களால் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசு அதிகாரிகளால் சிலருக்குத் இடையூறுகள் ஏற்படலாம். வீண் அலைச்சல்கள் ஏற்படும். எனவே, துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். ஆயினும், பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். சிலருக்குக் குழந்தைகள் தொல்லையும், அவமானங்கள் ஆகியவை ஏற்படலாம்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் வாரம் தாய்வழி உறவுகள் உதவி செய்வார்கள். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புக்கள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாத நிலை ஏற்படும்.

பூசம் --

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத சில பிரச்சனைகள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை.

ஆயில்யம் –

இந்த வாரம் புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய தீர்வைகள், வரி பாக்கிகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். . புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாத ங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் இனிய பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூல பலன்கள் உண்டு. உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது.

பூரம் –

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். . அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள்

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு.

அஸ்தம் –

இந்த வாரம் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒப்பந்தங்களில் கையெழுத்து போடுவதற்கு முன் நன்கு படித்த பின் கையொப்பம் இடவும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புதிய வீடு மனை வாங்கும் முயற்சிகள் வெற்றி பெறும். அதற்கான வங்கி கடன் உதவிகள் சுலபமாக கிடைக்கும். வீட்டில் திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் மூலம் மகிழ்ச்சி நிலவும். போட்டி தேர்வுகளில் வியாபாரிகளுக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வியாபார விருத்தி ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு விருப்பப்படி புதிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இன்பம் நிலைத்திருக்கும். இதுபோன்ற சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். சுறுசுறுப்பாக பணிகளை ஆற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். புனித யாத்திரைகளின் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புக்காக பல இடங்களுக்கு அலைந்து திரிய நேரிடும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

சுவாதி –

இந்த வாரம் உங்களுக்கு திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். அரசு பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். அவர்களின் அன்பு மற்றும் ஆதரவால் இடமாற்றங்கள் நினைத்தபடி கிடைக்கும். சிலருக்கு சோதனைகள் பல வந்தாலும் அதை சாதனையாக்கி வெற்றி பெறுவார்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலமாக இருக்கும்.. அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். ஓரளவு பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றஞ்சாட்டப்பட்டு அவதிப்பட நேரலாம்.

அனுஷம் –

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். வியாபாரிகள் எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால் தான் அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். பழுதடைந்த வீடுகள் மராமத்து செய்ய வேண்டிய நிலை உருவாகும். அரசு அதிகாரிகள் கெடுபிடி அதிகமாகி குழப்பங்கள் ஏற்படலாம். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும்.

கேட்டை –

இந்த வாரம் உங்களுக்கு மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் ஆதாயம் அதிகரிக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சில நேரங்களில் நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும்.

பூராடம் –

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். பெரிய மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறனை குறையும் வாய்ப்பு ஏற்படலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

திருவோணம் -

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர்.

சதயம்-

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். சிலருக்குப் புண்ணியத் தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும், புத்திர பாக்கியம் ஏற்படும். தான தர்மம் போன்ற நற் செயல்களில் ஈடுபட்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். ஆடை, ஆபரணங்கள், போன்ற அனைத்து வசதிகளையும் பெற்று மகிழ்வீர்கள். சிலருக்குப் பயணங்களில் சிறு துன்பங்கள் ஏற்படும். எச்சரிக்கை அவசியம். குடும்ப அமைதி குலையாமல் இருக்க ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சிலருக்கு எதிலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் மன தடுமாற்றம் ஏற்படும். நல் ஆரோக்கியம், சந்தோஷம், தனலாபம், அனைத்திலும் வெற்றி, பொன் பொருள் சேரல் எனப் பல வகை யோகங்களும் ஏற்பட்டு மனம் நிறைந்த வாரமாக அமையும்.

ரேவதி-

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். பயணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும்.




● சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "தொல்குடி புத்தாய்வு" திட்டத்தின் கீழ் 2024-2025-ம் கல்வியாண்டில் பழங்குடியினர் வாழ்வியல் குறித்து சிறப்பாக ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொண்ட இளங்கலை, முதுகலை மாணவர்கள் மற்றும் முனைவர், முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கு விருதுகள், சான்றிதழ்களை அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார். அருகில் கூடுதல் செயலாளர் ஆர்.உமாமகேஸ்வரி, அண்ணாதுரை உள்ளனர்.



● சென்னை அடையார் மண்டலம் இந்திரா நகர் தொடக்கப்பள்ளியில் கோடைகால வெப்ப அலை பாதிப்பு மற்றும் வெப்பவாத தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையர் வி.ஜெயச்சந்திரபானு ரெட்டி, இயக்குநர் அருண் தம்புராஜ், நிலைக்குழு தலைவர் கோ.சாந்தகுமாரி, மண்டலக்குழு தலைவர் ஆர்.துரைராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



● மதுரை மாவட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் கட்டுமானம், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சங்கீதா, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.




● மதுரை மாவட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம், அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நேற்று அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் அமைச்சர்கள் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், சி.வி.கணேசன், கலெக்டர் சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில்

# ரூ.45 கோடியில் புதிய விடுதி கட்டிடம் ஏப்ரல் 14-ல் திறப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

சென்னை, மார்ச் 31-

சென்னை நந்தனம் எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய விடுதி கட்டிடம், அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14-ம் தேதி திறக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு கண்காணிப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

ஆதி திராவிடர், பழங்குடியின மாணவர்களின் உயர் கல்வி கனவை நனவாக்க, சென்னை நந்தனம் எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் 500 மாணவர்கள் தங்கி பயில, 10 தளங்களுடன், 121 அறைகள், நவீன வசதியுடன் நூலகம், பயிலகம், கற்றல் கற்பித்தல் அறை, உடற்பயிற்சி கூடம், உள்அரங்கு விளையாட்டு கூடம் ஆகியவற்றுடன் கூடிய புதிய கட்டிடம் ரூ.44.50 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தை போற்றும் வகையில், அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ம் தேதி சமத்துவ நாளன்று இந்த விடுதி திறக்கப்பட உள்ளது.

இன்றைய கூட்டத்துக்கு வந்துள்ள எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், தோழமை கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் திறப்பு விழாவில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு முதல்வர் பேசினார்.

முன்னதாக எம்.சி. ராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில் கட்டப்பட்டு வரும் புதிய விடுதி கட்டிட கட்டுமான பணிகளை பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

குறித்த காலத்துக்குள் பணிகளை முடிக்குமாறு பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

# மத்திய அரசுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஏடிஎம் அட்டையைத் தேய்க்க, பணக்காரர்கள் திளைக்கிறார்கள்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏ.டி.எம். மையங்களில் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பணப் பரிவர்த்தனை சேவைகளுக்கான கட்டணங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி வாடிக்கையாளர் ஒருவர் தனது சேமிப்புக் கணக்கு உள்ள வங்கி இல்லாமல் மற்றொரு வாங்கியின் ஏ.டி.எம்.மில் பணம் எடுத்தால் அதற்கான கட்டணத்தை 17 ரூபாயில் இருந்து ரூ.19-ஆக ஒன்றிய ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ளது.

மேலும் இலவச பரிவர்த்தனைக்கான எண்ணிக்கையை கடந்தால் கூடுதலாக ரூ.2 வசூலிக்கப்பட உள்ளது. மே 1-ம் தேதி முதல் இந்த கட்டண நிர்ணயம் அமலுக்கு வரவுள்ளது. ஒருவர் தனது சேமிப்பு கணக்கு உள்ள வங்கி ஏ.டி.எம்.மில் மாதந்தோறும் 5 முறை இலவச பரிவர்த்தனை மேற்கொள்ளலாம். இந்த இலவச பரிவர்த்தனைக்கு மேல் பணம் எடுக்கும் போது, அதற்கான கட்டணம் 21 ரூபாயில் இருந்து ரூ. 23 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தான், ஏ.டி.எம். கட்டணம் உயர்வு டிஜிட்டல்மயமாக்கம் அல்ல, நிறுவனமயமாக்கப்பட்ட சுரண்டல் எனக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# மியான்மர் நிலநடுக்க மீட்பு பணிகளில் இந்திய வீரர்கள்

நேப்பிடா, மார்ச் 31-

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 10,000 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளது என்று மியான்மர் சமூக ஆர்வலர்கள் அளித்த தகவல்களின் பேரில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில் அங்கு தேசிய பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த 80 இந்திய வீரர்கள் அங்கு மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.




இந்தியாவின் அண்டை நாடான மியான்மரில் (பர்மா) மோனிவா நகருக்கு அருகே 3 நாட்களுக்கு முன் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அலகில் 7.7 ஆக பதிவானது.

இதில் மியான்மர் தலைநகர் நேப்பிடா, சாகைங், மண்டலை, பைகோ, மாகுவே, ஷான் ஆகிய 6 மாகாணங்கள் நிலநடுக்கத்தால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

இந்நிலையில் மியான்மருக்கு உதவுவதற்காக 'ஆபரேசன் பிரம்மா' என்ற நடவடிக்கையை மத்திய அரசு தொடங்கி உள்ளது. இதன்படி 15 டன் நிவாரண பொருட்களுடன் தேசிய பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த 80 வீரர்கள் சிறப்பு விமானத்தில் மியான்மருக்கு சென்றுள்ளனர். இந்திய ராணுவத்தின் சார்பில் மியான்மரில் தற்காலிக மருத்துவமனை தொடங்கப்பட்டு உள்ளது. இந்திய கடற்படையை சேர்ந்த ஐஎன்எஸ் சாவித்ரி கப்பலில் 40 டன் நிவாரண பொருட்கள் மியான்மருக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன.

இந்தியாவை சேர்ந்த சுமார் ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள் தாய்லாந்து, மியான்மருக்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று மத்திய வெளியுறவுத் துறை விளக்கம் அளித்துள்ளது.

மியான்மரின் அண்டை நாடான தாய்லாந்திலும் 3 நாட்களுக்கு முன் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் தலைநகர் பாங்காக்கில் புதிதாக கட்டப்பட்ட 30 மாடி கட்டிடம் இடிந்து நொறுங்கியது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். 68 பேர் படுகாயம் அடைந்தனர். 101 பேர் கட்டிடத்தில் சிக்கி உள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, மியான்மர் சமூக ஆர்வலர்கள் அளித்த தகவல்களின்பேரில் சர்வதேச ஊடகங்கள், நிலநடுக்க பாதிப்பு குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளன. அதில் மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 10,000 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்பு உள்ளது. ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்திருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட

# 5 மாவட்டங்களில் ஏப்.2-ல் கனமழை பெய்ய வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, மார்ச் 31-

தமிழகத்தில் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் ஏப்ரல் 2-ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது.

இன்றும் (31-03-2025) , நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

02-04-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், தென்காசி, விருதுநகர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

03-04-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 04-04-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

05-04-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 2-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் ஏ.தங்கபாண்டி ஏற்பாட்டில் நேற்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் ஜீவா நகர் பகுதியில் பூத் கமிட்டி நிர்வாகிகள் சரிபார்க்கும் பணியினை முன்னாள் மாவட்ட செயலாளர் ஆனிமுத்து ஆய்வு செய்தார். இதில் நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன், கு.திரவியம், வக்கீல் தமிழ்செல்வம், எஸ்.எம்.டி.ரவி, ராஜா சீனிவாசன், கராத்தே கார்த்தி, கனகராஜ் பாசறை சங்கர் உள்ளனர்.